க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,

# வணிகக்கல்வி

## *Business Studies*

(புதிய பாடத்திட்டத்திற்கமைவானது)

# இன்றைய வாணிப நடைமுறை

ஆசிரியர் :

திரு.வி.சிவா B.B.A (Cey)

கார்த்திகேயன் வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Miss. Subantheme. Thiyagaraja

# வணிகக்கல்வி
## (Business Studies)

"இன்றைய வாணிப நடைமுறை"

ஆசிரியர்

வி. சிவா B.B.A

கார்த்திகேயன் வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | :- | இன்றைய வாணிப நடைமுறை |
| நூல் ஆசிரியர் | :- | வினாயகமூர்த்தி சிவானந்தபாலன் (B.B.A (cey) |
| முகவரி | :- | Harrow கல்வி நிலையம்<br>இல:- 9, ராஜ சிங்க வீதி,<br>வெள்ளவத்தை,<br>கொழும்பு-6. |
| முதற் பதிப்பு | :- | 1996 - வைகாசி |
| பதிப்புரிமை | :- | ஆக்கியோனுக்கே |
| அச்சிட்டு வெளியிட்டோர் | :- | கார்த்திகேயன் பிறைவேட் லிமிடெட்<br>501/2 1வது மாடி, சிலோன் இன்,<br>காலி வீதி,<br>கொழும்பு-6. |

**விலை:** 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

இன்று வணிகக்கல்வி, பொருளியல், கணக்கியல் போன்ற பாடங்களைப் பயிலும் சாதாரண வகுப்பு மாணவர் தொடக்கம் பட்டப் படிப்பு வரை தமிழ் மொழி மூலமான நூல்கள் இல்லாமை பெரும் குறைபாடாக இருந்து வருகின்றது. தென் இந்தியாவில் இக் கல்விக்கான நூல்கள் போதுமான அளவு கிடைக்கின்ற போதும் அவை எமது நாட்டின் சம்பவத் திரட்டுக்கள், புள்ளி விபரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய இலங்கைக்கு பொருத்தமான நூலாக அமைவது இல்லை. அத்துடன் இலங்கையில் இன்றைய வாணிப விபரங்கள் அநேகமானவை சிங்கள மொழி, ஆங்கில மொழி ஆகியவற்றில் இருப்பதால் தமிழ் மொழி மூலமான மாணவர்களிற்கு அது பயன்படுத்தக் கிடைப்பது இல்லை. இதனால் திரு. வி. சிவானந்தபாலனின் ''இன்றைய வாணிப நடைமுறை என்ற நூல் தமிழ் மொழிமூலமான மாணவர்களிற்கு மிகவும் பயன்பாடு உடையதாக இருக்குமென நான் நம்புகிறேன்.

இந்நூலில் வங்கியியல், தொடர்பாடல், போக்குவரத்து, தொழிலாளர் உறவு போன்ற விபரங்கள் சரியான விளக்கங்கள் வழங்கப்பட்டு இருப்பதுடன், சில ஆங்கிலச் சொற்களிற்கு சரியான விளக்கமான தமிழ் பதங்களையும் ஆசிரியர் பிரயோகித்து உள்ளார். இது கல்வி கற்கும் மாணவர்களிற்கு மட்டுமன்றி தற்கால பொருளாதார வாணிப விபரங்களை அறிய விரும்பும் பொது மக்களிற்கும் பயன்படும். இவரின் இச் சேவை எதிர் காலத்திலும் தொடர நான் பாராட்டுகின்றேன்.

**முகமது சமீம்** B.A. (Cey)
முன்னாள் கல்விப்பணிப்பாளர்
Harrow சர்வதேச கல்லூரியின் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இன்று தமிழ் மொழி மூலமாக வணிகக்கல்வி பயிலும் மாணவர்களின் தொகை பெருகி வருகின்றது. அத்துடன் கடந்த வருடம் இக் கற்கை நெறிக்கான பாடத்திட்டங்களும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. எனவே இம் மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தமிழ் மூலமான நூல்கள் மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்வது வணிகக் கல்வி துறையை சார்ந்தவர்களின் பிரதான கடமையாகும் இதன் அடிப்படையில் திரு.வி.சிவானந்தபாலன் உரிய நேரத்தில் முழு நிறைவுடன் ''இன்றைய வாணிப நடைமுறை'' என்ற நூலை வெளியிடுவது பாராட்டுக்குரியது.

இந் நூலை வெளியிடும் வி.சிவானந்தபாலன் ஆரம்ப காலத்தில் இருந்து எனது அபிமானத்திற்குரிய மாணவராக இருப்பதுடன், கொழும்பு சென்.பீற்றர் கல்லூரியில் உயர் தரத்திற்கு இப்பாட நெறியை கற்பிப்பதுடன், இப்பாட நெறி தொடர்பாக 10 வருட அனுபவமும் இருப்பதால் ''இன்றைய வாணிப நடைமுறை'' என்ற இந் நூலை வெளியிடும் தகுதி இவருக்கு உண்டு என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அத்துடன் மாணவர் சமூகத்துக்கு இவர் ஆற்றும் அரும்பணி எதிர் காலத்திலும் தொடர வேண்டும் என எதிர் பார்க்கின்றேன்.

13.5.1996

க.தேவராஜா
தலைவர்,
வர்த்தகத்துறை,
யாழ் பல்கலைக் கழகம்,
யாழ்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இன்று வணிகக்கல்வி பாடங்களைக் கற்கும் மாணவர்களின் எண் ணிக்கை பெருகிவருகிறது. அதே நேரத்தில் வணிகக்கல்வியுடன் தொடர்பு டைய சகல துறைகளும் நாளாந்தம் வளர்ச்சி கண்டு வருவதால், அண்மைக் கால நிகழ்வுகள் பற்றி மாணவர் அறிந்திருக்க வேண்டியது பாடத்திட்டத்தில் பிரதானமானதாக கொள்ளப்படுகின்றது. ஆனால் நடப்பியலை போதியள விற்கு தமிழ் மொழியில் விளக்கும் பிரசுரங்கள் மிகக்குறைவாகவே காணப் படுகிறது. இந்த இடையீட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் நோக்குடன் இன்றைய வாணிப நடைமுறை என்ற நூலை எழுதத் துணிந்துள்ளேன்.

இன்றைய ''வாணிப நடைமுறை'' எனும் நூலில் பாடத்திட்டம் தொடர்பான கோட்பாடுகள், எண்ணக்கருக்கள் என்பவற்றை விட இத்துறை களில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டு வரும் வளர்ச்சிகள், மாற்றங்களே அதிக ளவு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நூல் வர்த்தக மாணவர்க ளின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் இந்நூலுக்கு மாணவர்கள் போதுமான ஆதரவும் தருவார்கள் என்பது நம்பிக்கை.

அத்துடன் இந் நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய திரு முகமது சமீம் அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய திரு. தேவராஜா அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை பெருமனதுடன் குறுங்காலத்தில் அழகுற அச்சிட்டு வெளி யிட உதவிய கார்த்திகேயன் பிறைவேட் லிமிடெட் அச்சக நிறுவனத்திற்கும் உத்தியோகத்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

14.5.1996 வி. சிவானந்தபாலன் B.B.A (cey)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதிவுள்ளோருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு

## *Residents foreign currency Accounts*

1991 ஆம் ஆண்டு இலங்கையிலுள்ள இலங்கையரும், இலங்கையிலுள்ள வெளிநாட்டவரும் வெளிநாட்டு நாணயவடிவில் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியில் ஆரம்பிக்கப்படக் கூடிய கணக்கே வெளிநாட்டு நாணயக் கணக்காகும். இக் கணக்கின் ஊடாக சேமிப்பு வைப்பையும், நிலையான வைப்பினையும் ஆரம்பிக்கலாம். சேமிப்பு கணக்காயின் 500 அமெரிக்க டொலரும், நிலையான வைப்பு ஆயின் 2000 அமெரிக்க டொலரும் ஆரம்ப வைப்பாக இட்டு கணக்கினை ஆரம்பிக்க வேண்டும். விமானத் தபால் மாற்றீடு, பயணிகள் காசோலை, சர்வதேச காசுக்கட்டளை போன்றவற்றையும், சுங்க அதிகாரிகளுக்கு வெளிப்படுத்திக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயத்தையும் இதில் வைப்பில் இடக்கூடியதாக இருக்கும். அத்துடன் இலங்கை நாணயம், வெளிநாட்டு நாணயம், பயணிகள் காசோலைகள், கடன் அட்டை போன்ற வடிவில் பணத்தை மீளப் பெறலாம்.

**RFC யினால் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் அனுகூலங்கள்**

1) செலவாணிக் கட்டுப்பாடுகள் தளர்வு
2) கடன்பெறுமானம், மேலதிகப்பற்று வசதி வழங்கல்
3) வருமானவரி, செல்வவரி, தடுத்து வைத்தல் வரி போன்ற வரிச்சலுகைகள்
4) வட்டி வெளிநாட்டு நாணய வடிவில் வழங்கப்படல்
5) உள்நாட்டு, வெளிநாட்டு நாணய வடிவில் பணம் மீளப்பெறல்
6) இலவச ஆயுள் காப்புறுதி
7) சர்வதேச கடன் அட்டை வழங்கல்
8) பெறுமதி மாற்றத்துக்கேற்ப வெளி நாட்டு நாணயமாக மாற்றும் வசதி

•ஏற்றுமதி வருவாய்களின் ஆண்டுக்கான அதிகரிப்பில் 5% தொகையின் வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

NRFC யை வெளிநாடு சென்றவர்கள் அல்லது தொடர்ந்தும் வெளி நாடுகளில் உள்ளவர்கள் ஆரம்பிக்கலாம். ஆனால் RFC யினை வெளிநாட்டு வருமானமுள்ள வதிவுள்ளோர் மட்டுமே ஆரம்பிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரஜையல்லாதோருக்கான
## வெளிநாட்டு நாணயக் கணக்கு (NRFC)
*(Resident non = National Foreign Currency Accounts)*

வதியும் விசாவுடன் இலங்கையில் வேலை செய்யும் வெளிநாட்டவராக இருப்பின் முதலீட்டுக்காக அல்லது வாழ்க்கைச் செலவுக்காக இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தை அடிப்படையாகக் கொண்டு இக் கணக்கு ஆரம்பிக்கப்படுவதாகும். இதில் தூதுவர் நிலையங்களில் வேலை புரியும் இராஜதந்திரிகளும் இக் கணக்கை ஆரம்பிக்கலாம்.

## இடை நிறுத்தப்பட்ட இலக்கமிடப்பட்ட
## இரகசிய வங்கிக் கணக்கு
*(Numbered Secret Accounts)*

வைப்பாளரின் பெயர், முகவரிக்குப் பதிலாக இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டு கணக்கு ஆரம்பிக்கப்படுகின்ற அந்தரங்க வைப்பு முறையினைக் கருதும். இது 1988 ஆம் ஆண்டு 30 இலக்க வங்கித் தொழில் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு 1991 ஆம் ஆண்டு இக்கணக்கினை ஆரம்பிக்க அனுமதி மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்டது. பின்னர் 1995 ஆம் ஆண்டு இக்கணக்கு இடை நிறுத்தப்பட்டது.

## புதிய நாணய வெளியீட்டுத் திட்டம்

1991 ஆம் ஆண்டு மத்திய வங்கியினால் நாணய முகாமை மற்றும் நாணயம் சார்ந்த தொழிற்பாடுகளில் நவீன பல மாற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள நாணயத்தில் எதிர்பார்க்கப்பட்ட தரத்தைக் கொண்டிராமை, நீண்ட கால வாழ்வுத் தன்மை இன்மை, இலகுவாக இனம் காணும் தன்மை இன்மை ஆகிய குறைபாடுகளைக் கொண்டு காணப்பட்ட காரணத்தினால் அதைத் தவிர்ப்பதற்கு 10,50, 100,500,1000 ரூபா தாள் நாணயங்களும் 500,1000, ரூபா குற்றி நாணயங்களும் புதிதாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த நாணயத்துடன் ஒப்பிடும் வேளை இப்புதிய நாணயம் பின்வரும் பண்புகளைக் கொண்டு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) நாணயத்தின் வடிவமைப்பு சர்வதேச தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளமை
2) தரம் உயர்ந்த தாள்களில் அச்சிடப்பட்டமை
3) ஏற்கனவே புழக்கத்தில் உள்ள நாணயத்தை விட சிறிய அளவாக அச்சிடப்பட்டுள்ளமை
4) போலி நாணயங்களை இலகுவாக இனம் காண உதவுகின்றமை
5) நாட்டின் வரலாற்று மற்றும் தொல்பொருள் விடயங்களை வெளிக்காட்டி நிற்கின்றமை

## வதிவற்றோருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு
## *(Non Resident Foreign Currency Account)*

மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட பிரிவினர், அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளில் ஆரம்பிக்கக்கூடிய வெளிநாட்டு நாணயக் கணக்கை இது குறிக்கும் அன்னியச் செலாவணியை உழைப்பதை பிரதான நோக்கமாகக் கொண்ட இக் கணக்கு அரசினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள், விசேட வசதிகளையும் உள்ளடக்கியுள்ளது. இது 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் நாடு திரும்பிய 90 நாளில் இக் கணக்கினை ஆரம்பிக்க முடியும். அத்துடன் இலங்கையைப் பிறப்பிடமாக கொண்டு இலங்கைக்கு வெளியே வசிப்பவர்களும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் அனுமதி வழங்கப்பட்ட முகவர்களும் இக் கணக்கை ஆரம்பிக்கலாம்.

இக் கணக்கின் பிரதான பண்புகள் வருமாறு: -

1) அங்கீகரிக்கப்பட்ட தகமையுடைய - பிரிவினராலேயே ஆரம்பிக்க முடியும்.
2) வெளிநாட்டு நாணய வடிவில் பணத்தை வைப்பில் இடல்.
3) வெளிநாட்டு, உள்நாட்டு நாணய வடிவில் பணம் மீட்பு செய்யமுடிதல்.
4) வட்டி வெளிநாட்டு நாணய வடிவில் நிர்ணயிக்கப்படல்.
5) சேமிப்புக் கணக்கு அல்லது நிலையான வைப்புக்கணக்கு என்ற வடிவில் கணக்கு ஆரம்பிக்க முடிதல்.
6) கவர்ச்சியில்லாத வட்டி வீதம்.
7) கடன் பெறுமானம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) வருமானவரி, தடுத்துவைத்தல் வரி, செல்வ வரி போன்ற வரிச் சலுகை
9) அன்னியச் செலாவணி உழைத்தல் நோக்கம்

## NRFC யினால் கிடைக்கும் அனுகூலம்

1) வெளிநாட்டு நாணய வடிவில் பணத்தை மீளப் பெறல்
2) ஐரோப்பிய சந்தை வட்டி நிலைமைக்கு ஏற்ப கவர்ச்சியான வட்டி
3) செலாவணிக் கட்டுப்பாட்டு விதி தளர்வு.
4) க ன் பெறுமானம், மேலதிக பற்று வசதி உண்டு.
5) வரி நலன் உண்டு
6) நிழுவைக்கு சர்வதேச வீசா அட்டை, பயணிகள் காசோலை போன்ற வற்றைப் பெறமுடிதல்.
7) சீட்டு இழுப்பில் பரிசில்
8) இலவச காப்புறுதி வசதியும் உண்டு

## NRFC யின் முக்கிய பண்புகளின் உள்ளடக்கம்

1) **அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்**
அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், டொயிஷ் மார்க்,சுவிஸ், பிராங், ஜப்பான் யென், பிரெஞ்சு பிராங், அவுஸ்திரேலியா டொலர், சிங்கப்பூர் டொலர்.

2) **கணக்கு ஆரம்பிக்க அங்கீகரிக்கப்பட்ட தகமையுடைய பிரிவினர்**
1) வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்ற இலங்கையர்
2) வெளிநாடுகளில் உள்ள இலங்கை வம்சாவளியினர்.
3) மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டவர்.
4) பிரயாண முகவர் நிலையம்.

3) **கணக்கு ஆரம்பிப்பதற்கான நடை முறைகள்**
பூர்த்தி செய்யப்பட்ட சேமிப்புக் கணக்கு விண்ணப்பப்படிவத்துடன் கடவுச்சீட்டின் நிழற்படப் பிரதிகள் போன்றவற்றுடன் ஆரம்பவைப்புப் பணத்தையும் சேர்த்து வங்கியில் ஒப்படைத்தல்.

4) **வட்டி கணிப்பிட்டு வழங்கும் நடைமுறை**
சேமிப்பு வைப்புக்கு மாதாந்தம் கணித்து வருட இறுதியில் வரவு வைக்கப்படும் வட்டி வீதம் முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம். ஆனால் நிலையான வைப்புக்கு ஆரம்பித்தலிருந்து முதிர்வுத்தினம் வரை வட்டி கணிப்பிட்டு மூலவைப்புடன் சேர்க்கப்படும். இரண்டு வைப்புக்கும் வெளிநாட்டு நாணய வடிவில் வட்டி கணிப்பிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) **பண மீட்டு அனுமதிக்கப்படும் நடை முறை**

சொந்த விருப்பத்தின் பெயரில் உள்நாட்டு நாணயத்தில் பணத்தை மீளப் பெறலாம் ஆனால் வெளிநாட்டு நாணயத்தில் மீளப்பெற முற்படும் போது கடவுச்சீட்டுடன் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பயணச்சீட்டும் அவசியம் தேவைப்படும்.

6) **எந்த வகைப் பணத்தை வைப்புச் செய்ய முடியும்**

1) சுங்கப் பகுதியினரின் அனுமதியுடன் கொண்டுவரும் வெளிநாட்டு நாணயம்
2) வெளிநாட்டில் இருந்து அனுப்பப்படும் வங்கிவரையி,விமான தபால் மாற்றீடு, தந்தி மாற்றீடு, பயணிகள் காசோலை, சர்வதேசக் காசுக்கட்டளை போன்றவை
3) ஒரு NRFC யில் இருந்து மற்றைய NRFC கணக்குக்கு மாற்றப் படும் தொகை
4) வேறு NRFC கணக்குக்கு கிடைத்த வட்டித் தொகை

7) **பெறக்கூடிய வரிச்சலுகைகள்**

1) சேரும் வட்டிக்கு வருமான வரி
2) தடுத்து வைக்கும் வரி
3) நிலுவைத் தொகைக்கு செல்வவரி

## தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம்
## *(Automated Teller Machine)*

வணிக வங்கியொன்றில் கணக்கு வைத்திருப்பவர்கள் வங்கிச் சேவையை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட தன்னியக்க இயந்திரத்தை இது குறிக்கும். இதன் மூலம் வங்கி நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் வங்கிக்கு வெளியில் இரவு, பகலாக இச் சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியும். நடைமுறைக் கணக்கு,சேமிப்புக்கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்களுக்கே இவ்வசதி வங்கியினால் வழங்கப்படும். இதனைப் பெற விரும்பும் நபர் ஒருவருக்கு அந்தரங்க அடையாள இலக்கமும் அத்துடன் ரெலர் அட்டையும் (Teller Card) வழங்கப்படும். இதைப்பயன் படுத்தி A.T.M பொறியை இயக்கி வங்கிச் சேவையைப் பெற முடியும். தேசிய சேமிப்பு வங்கி (NSB) யும் இப்பொறிமுறையை 1994 இல் இருந்து அறிமுகப் படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப் பொறி மூலம் பெறக்கூடிய வங்கிச் சேவைகள்

1) பணம் வைப்பிலிடல்
2) பணம் மீளப் பெறல்
3) கணக்குகளுக்கிடையே பணத்தை மாற்றல்
4) காசோலை வைப்பில் இடல்
5) கணக்கின் நிலுவைகளை அறிதல்
6) காசோலைப் புத்தகத்தை பெறல்
7) 'பின் கட்டணத்தைச் செலுத்துவதற்கான கட்டளையை இடல்
8) கடந்த சில நாட்களின் கொடுக்கல் வாங்கலை உள்ளடக்கிய கூற்றைப் பெறல்

## இப் பொறி மூலம் கிடைக்கும் அனுகூலம்

1) இரவு, பகல் வங்கிச் சேவையைப் பெறமுடிதல்.
2) வைப்பாளரின் முகவரும் வங்கிச் சேவையைப் பெற முடிதல்.
3) வங்கிச் சேவையைப் பெறுவதில் உள்ள தாமதம், சிரமம் போன்றவை குறைக்கப்படுதல்.
4) வங்கிக்கு வெளியிலும் வங்கிச் சேவையைப் பெறமுடிதல்.
5) சர்வதேச ரெலர் அட்டையையும் பயன்படுத்த முடிதல்.

இலங்கையிலுள்ள உள்ளூர் வணிக வங்கிகளும் பிரபல்யமாக இவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது. சம்பத் வங்கி SET (Sampath Electronic Teller) எனவும், இலங்கை வர்த்தக வங்கி CAT (Commercial Automatic Teller) எனவும், செலான் வங்கி SMART CARD (சீமாட்) எனவும், ஹற்றன் நஷனல் வங்கி CASHLINE CARD எனவும், இலங்கை வங்கி சீபேங் காசு நிலையம் CEY BANK CASH POINT என்ற பெயரிலும், மக்கள் வங்கி PET CARD என்ற பெயரிலும் தன்னியக்க கொடுக்கல் வாங்கல் பொறிகளை செயற்படுத்து கின்றன.

இரண்டு வணிக வங்கிகள் இணைந்து தன்னியக்க கொடுக்கல் வாங்கல் பொறிகளுக்கிடையில் பொதுவான வலைப்பின்னல் முறையினையும் ஏற்படுத்தியுள்ளது. ஹற்றன் நஷனல் வங்கியும், மக்கள் வங்கியும் இணைந்து COIN திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் படி PET CARD ஐ ஹற்றன் நஷனல் வங்கியின் A.T.M பொறியிலும் CASH LINE CARD ஐ மக்கள் வங்கியின் A.T.M பொறியிலும் பயன்படுத்த முடியும். தற்போது மொரட்டுவை, நுகேகொடை, கண்டி ஆகிய இடங்களிலே இத்தகைய COIN திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர் தமது அட்டையை எண்ணிக்கையில் கூடிய பொறியில் பயன்படுத்தி இச் சேவையைப் பெற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிக் கிளைகளுக்கிடையிலான வலைப்பின்னல்

## *(Inter Branch Net Work)*

வணிக வங்கிகள் தமது சேவையினை இலகுபடுத்திக் கொள்வதற்காக இம்முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு கிளையில் நடைமுறைக் கணக்கு அல்லது சேமிப்புக் கணக்கு வைத்து இருக்கும் ஒருவர் அக் கணக்கினைப் பயன்படுத்தி, அவ்வங்கியின் சகல வங்கிக் கிளைகளிலும் வரையறுக்கப் பட்டளவு வங்கிச் சேவையைப் பெற முடியும். இது கணனி மயப்படுத்தப்பட்ட ஓர் வங்கிச் சேவையின் பலாபலனாகவே காணப்படுகின்றது. இத்தகைய வலைப்பின்னல் முறையினால் பெறக்கூடிய வங்கிச் சேவைகள் வருமாறு.

1) காசோலை வைப்பிலிடல்
2) காசை வைப்பிலிடமுடிதல்
3) பண மீட்புச் செய்யலாம்
4) காசோலையைப் பணமாக்கலாம்

இலங்கை வர்த்தக வங்கி தமது முக்கிய கிளைகளை உள்ளடக்கி COM NET என்ற பெயரில் இச்சேவையை வழங்குகின்றது. அதேபோன்று செலான் வங்கி தமது 81 கிளைகளை உள்ளடக்கி கிளைகளுக்கிடையிலான வலைப் பின்னல் (Inter Branch Net Work) முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இச் சேவையினை முதலில் அறிமுகப்படுத்திய வங்கி சம்பத் வங்கி ஆகும்.

## தொலைபேசி வங்கிச் சேவை

## *(Phone Banking)*

வாடிக்கையாளர் ஒருவர் வங்கிக்குச் செல்லாமல் தொலைபேசி மூலம் வரையறுக்கப்பட்டளவு வங்கிச் சேவையினைப் பெறக்கூடிய ஓர் வங்கிச் சேவை முறையினையே தொலைபேசி வங்கிச் சேவை என்பர். தொலைபேசி மூலம் வங்கிச் சேவையினைப் பெற விரும்பும் ஒருவருக்கு வங்கியினால் தனிப்பட்ட அடையாள இலக்கம் (Personal Identification Number) (PIN) வழங்கப்படும். இது அந்தரங்கமானது. இதன் மூலம் வாடிக்கையாளரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

### தொலைபேசி மூலம் பின்வரும் வங்கிச் சேவையைப் பெற முடியும்

1) கணக்கின் நிலுவையை அறிய முடிதல்
2) காசோலை பற்றிய விபரங்களை அறிய முடிதல்
3) மின் கட்டணங்களைச் செலுத்த முடிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) தற்காலிக கணக்கு நிலுவைகளை பக்ஸ் (Fax) மூலம் பெறலாம்.

இச் சேவையை இலங்கையில் யூனியன் வங்கி, செலான் வங்கி, இலங்கை வங்கி போன்ற வங்கிகள் செயற்படுத்தி வருகின்றன.

### அன்னியச் செலாவணிக்கான வங்கி கூறு
### *(Foreign Currency Bank Unit)*

பெயர் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளினால், மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பிரிவினருடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்காக வணிக வங்கியினால் ஏற்படுத்தப்பட்ட ஓர் பிரிவாக அன்னியச் செலாவணிக்கான வங்கி கூறு காணப்படுகின்றது. இது கடல் கடந்த வங்கித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றது. இலங்கையில் 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின்படி உரிமையளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் மத்திய வங்கியின் நாணய சபையிடம் இருந்து பெறப்படும் விசேட அனுமதிப்பத்திரத்துடன் இத்தகைய வங்கிக் கூற்றினைக் கடல் கடந்த வங்கித் தொழில் திட்டத்துக்கு இணங்கி நடாத்த முடியும்.

## *FCBU* யுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் தகுதியுடைய பிரிவினர்

1) இலங்கை முதலீட்டுச் சபையின் கீழுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்கள்.
2) வெளிநாட்டவர்.
3) சுற்றுலாப் பயணிகள்
4) வேறு அன்னியச் செலாவணிக்கான வங்கிக் கூறு
5) மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட உள்நாட்டவர்.

## *FCBU* வின் தொழிற்பாடுகள்

1) பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வடிவில் பணத்தொகையை வைப்பாக ஏற்றல்.
2) பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வடிவில் பணத்தொகையை கடனாக வழங்கல்
3) வேறு அன்னியச் செலவாணிக்கான வங்கிக் கூறுகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடல்.
4) மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் உள்நாட்டவருடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டவரிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் கூறு ஒன்று அப்பணத்தொகையை அடிப்படையாகக் கொண்டு சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கும் உரிமையினை உடையது. ஆனால் நிலையான வைப்பு விடயத்தில் அத்தகைய வைப்புப்பணம் 10,000 ஐக்கிய அமெரிக்க டொலருக்கு (U.S $) குறையாததாக அல்லது சமமானதாக இருக்க வேண்டும். அத்துடன் சேமிப்புக் கணக்கில் இருந்து காசோலையைப் பயன்படுத்த அனுமதிக்கும் ஏதேனும் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்க முடியாது.

## பேஜர்
## *(Pager)*

தொலைபேசித் தொடர்பாடலின் ஊடாக வெளிக்கள நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவருடன் எந்த நேரத்திலும் வலைப்பின்னல் உள்ள இடங்களில் தொடர்பாடலில் ஈடுபடலாம். இதன்படி தொலைபேசியின் ஊடாக தனியார் துறை பேஜர் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அதன் மூலம் குறிப்பிட்ட நபரின் பேஜர் உடமையாளரை சென்றடையும் போது முதலில் தொலைபேசியைப் போன்று ஒலி ஒன்றை ஏற்படுத்தும் பின்னர் தகவல் வழங்கும். இங்கு பேஜர் உடமையாளன் தகவல்களை மாத்திரம் பெற்றுக் கொள்ளலாமே தவிர, தமது தகவல்களைப் பரிமாற்ற முடியாது. இதனால் தொலைபேசி, செலூலர் தொலைபேசிகளைப் போன்று இருவழித் தொடர்பாடல் முறை காணப்பட மாட்டாது. தனியார்துறை கம்பனிகளினால் மாத்திரமே பேஜர் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. NET PAGE நிறுவனம் முக்கியமானது.

ஆரம்பத்தில் பேஜர் மூலம் தொலைபேசி இலக்கங்கள் மாத்திரம் பரிமாற்றப்பட்டு வந்தது தற்போது வரையறுக்கப்பட்ட அளவு தகவலும் பரிமாற்றப்படுகின்றது.

## நுகர்வோனின் பிரதான உரிமைகள்

சர்வதேச நுகர்வோர் சங்கத்தின் ஏற்பாட்டின்படி நுகர்வோர் ஒருவர் நுகர்வு தொடர்பாக பின்வரும் உரிமைகளைக் கொண்டு காணப்படுகின்றார்.

1) பொருள் எதிர்பார்த்த அடிப்படைத் தேவையை நிறைவேற்ற வேண்டும்.
2) பொருள் தொடர்பான தகவல் பெறும் உரிமை
3) பொருளைத் தெரிவு செய்து பெறும் உரிமை
4) விளம்பரத்தை விளங்கிக் கொள்ளும் உரிமை
5) பழுதான பொருளுக்கு நட்டாடு கோரல்
6) கடை நல்ல சூழல் கொண்டதாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நுகர்வோனைப் பாதுகாப்பதற்காக பின்வரும் சட்டங்கள் காணப்படுகின்றது.

## 1980 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க உணவுச்சட்டம்

உணவு இறக்குமதி, ஏற்றுமதி, உற்பத்தி, விநியோகம், களஞ்சியப்படுத்தல் போன்றவை தொடர்பாக கட்டுப்படுத்தல். இது ஹோட்டல்கள், உணவுச்சாலை, போன்றவற்றை கட்டுப்படுத்தும்.

### நுகர்வோரை பாதுகாக்கும் சட்டங்கள்.

1987 ஆம் ஆண்டு நியாய முறை வர்த்தக ஆணைக்குழுச் சட்டம்

1979 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.

1981 ஆம் ஆண்டு 21 இல் மோட்டார் வாகனச் சட்டம்.

1980 ஆம் ஆண்டு 47வது இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டம்.

1984 ஆம் ஆண்டு 6வது இலக்க இலங்கை கட்டளை நிறுவனச் சட்டம்.

## இடம் பெயர் வங்கிச் சேவை
## *(Mobile Banking Service)*

வங்கித் தொழில் வசதி இல்லாத அல்லது குறைந்த பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு வங்கித்தொழில் சேவைகளை வழங்குவதற்காக வணிக வங்கிகள் உட்பட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி போன்றவை இச்சேவையினை அளித்து வருகின்றன. அனேகமாக வங்கித் தொழில் சேவை குறைந்த கிராமிய பகுதியிலே அதிகளவு முக்கியம் பெறுகின்றது. வணிக வங்கிகள் என்ற அடிப்படையில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, சம்பத் வங்கி போன்ற வங்கிகளும் இச்சேவையினை வழங்குகின்றது.

### இடம் பெயர் வங்கிச் சேவையின் நோக்கம்

1) வங்கிக்கிளைகள் இல்லாத தொலை தூரத்திலுள்ள கிராமப் பகுதிக்கு வங்கிச் சேவையளித்தல்.
2) வங்கிக்கிளைகள் அமைப்பதால் ஏற்படும் செலவுகளைக் குறைத்தல்.
3) வங்கிகளுக்கிடையிலான போட்டிகளைத் தவிர்த்து வாடிக்கையாளரைக் கவரல்.
4) வங்கிச் சேவையை நாடு முழுவதும் விரிவுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறைசேரி உண்டியல்
## *(Treasury Bill)*

அரசு குறுங்காலக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரசின் சார்பில் மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு, மத்திய வங்கியினால் கேட்பு (TENDER) முறையால் விற்கப்படுகின்றது. 1990, 1991, 1992,1993 ஆம் ஆண்டுகளில் திறைசேரி உண்டியலுக்கு கேள்வி அதிகமாக காணப்பட்டமைக்கான காரணம் வருமாறு:

1) வட்டி உயர்வாகக் காணப்படல்.
2) பகிரங்கச் சந்தையில் வட்டி தீர்மானிக்கப்படுதல்.
3) முதிர்வுத் திகதிக்கு முன்னர் புறக்குறிப்பிட்டு கைமாற்றக் கூடியதாக இருத்தல்.
4) முதிர்வுத் திகதிக்கு முன்னர் மறு கொள்வனவுக்கான சந்தையில் பணமாக மாற்றக்கூடியதாக இருத்தல்.
5) ஒன்றுக்கு மேற்பட்ட முதிர்வுக்காலத்தைக் கொண்டிருத்தல்.
6) ஒன்றுக்கு மேற்பட்ட முகவிலையைக் கொண்டிருத்தல்.

1992 திறைசேரி உண்டியலுக்கான சந்தையினை விரிவுபடுத்தும் நோக்குடன் பின்வரும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

1) 1992இல் வணிக வங்கிகள், நிதிக்கம்பனிகள், நம்பிக்கை கூறு ஆகிய அமைப்புக்களை உள்ளடக்கி முதலாந்தர வணிகர் நியமிக்கப்பட்டமை.
2) நீண்ட முதிர்ச்சிக் காலங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டன. (2 வருடத்துக்கு மேல்)
3) 1993 ஆம் ஆண்டு ஒக்டோபரில் திறைசேரி உண்டியலுக்கான மறு கொள்வனவுச் சந்தை உருவாக்கப்பட்டது.

## திறைசேரி உண்டியலுக்கான மறு கொள்வனவுச் சந்தை
## *(Re-Purchase Market For Treasury Bills)*

திறைசேரி உண்டியலுக்கான திரவத்தன்மையினை மேலும் அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் திறைசேரி உண்டியலுக்கான சந்தையின் உப சந்தையாக 1993 ஒக்டோபர் 4 ஆம் திகதியில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இதன்படி திறைசேரி உண்டியலை உடையவர்கள் மத்திய வங்கியிடம் ஒப்படைத்து, உடன்பட்டதிகதியில் மீள உண்டியல் பொறுப்பேற்கப்படும் என்ற உத்தரவாதத்தின்படி, மத்திய வங்கியின் அனுமதியுடன் பின்வரும் நிதி நிறுவனங்களிடம் பணமாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வணிக வங்கி
2) தேசிய அபிவிருத்தி வங்கி
3) தேசிய சேமிப்பு வங்கி
4) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
5) அரசாஈட்டு முதலீட்டு வங்கி
6) E.P.F நிறுவனம்

இச்சந்தை அமைக்கப்பட்டதன் நோக்கம் யாதெனில், குறுங்கால நிதி மிகையினை எதிர் நோக்குகின்ற நிதி நிறுவனங்களுக்கு முதலீட்டு வழிவகைகளை வழங்குவதன் மூலம், திறைசேரி உண்டியலுக்கான இரண்டாந்தர அழைப்புச் சந்தையின் வட்டி வீதத்தில் காணப்பட்ட ஒழுங்கற்ற தளம்பலைத் தவிர்ப்பதுமே ஆகும்.

திறைசேரி உண்டியலின் உடமையாளர் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உடன்பாடு காணப்பட்ட முதிர்வுத்திகதியில் மீண்டும் வாங்கிக் கொள்ள கடமைப்பட்டதாகும். இதன் முதிர்வுத்திகதியில் 1,3,7, 30,90 நாள் வரை வேறுபடும். இத்திகதியில் உண்டியலை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

## இச்சந்தையை அறிமுகப்படுத்தியதன் நோக்கம்

1) குறுங்கால, நிதிமிகையினை எதிர்நோக்கும் நிதிநிறுவனங்களுக்கு முதலீட்டு வாய்ப்பை அளித்தல்.
2) திறைசேரி உண்டியலின் திரவத்தன்மையினை அதிகரித்து இச்சந்தையை அபிவிருத்தி செய்தல்.
3) வங்கிகளுக்கிடையிலான சந்தையில் வட்டி வீதத்தின் ஒழுங்கற்ற தளம்பலைத் தவிர்த்தல்

## முதலாம் தர வணிகர் (சான்றழிக்கப்பட்ட வணிகர்) *(Prime Dealer)*

இரண்டாந் தர திறைசேரி உண்டியலுக்கான சந்தை வாய்ப்பை அதிகரிக்கச் செய்து அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1992 ஆம் ஆண்டு மத்திய வங்கியினால் சான்றழிக்கப்பட்ட இவ்வணிகர் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இதன்படி மத்திய வங்கியிடம் இருந்து தொகையாக உண்டியல்களை கொள்வனவு செய்து அதனை மீள இரண்டாந் தர சந்தையில் பொதுமக்களுக்கு விற்பதற்காக நியமிக்கப்பட்ட நிறுவனங்களைக் குறிக்கும். இவர்கள் மாத்திரமே திறைசேரி உண்டியலைக் கொள்வனவு செய்வதற்கான கேட்புப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் உரிமையினைக் கொண்டு இருப்பர். பின்னர் முதலாம் தர வணிகர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட உண்டியல்களை புறக்குறிப்பிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்களுக்கு விற்பனை செய்வார். 1993 ஆம் ஆண்டின் படி முதலாந்தர வணிகர் என்ற அடிப்படையில் 13 வணிக வங்கிகள், 4 நிதிக்கம்பனிகள், 1 நம்பிக்கை கூறு போன்ற நிறுவனங்களே மத்திய வங்கியினால் சான்றழிக்கப் பட்டு செயற்பட்டுவருகின்றன.

## முதலாம் தர வணிகர் நியமிக்கப்பட்டமையினால் முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

1) வணிகர்களிடமிருந்து சுலபமாக கொள்வனவு செய்யலாம்.
2) வணிகர்களுக்கிடையிலேயான போட்டி காரணமாக குறைந்த விலையில் உண்டியலைக் கொள்வனவு செய்ய முடியும்.
3) முதிர்வுத் திகதிக்கு முன்னர் மீள வணிகரிடம் விற்பனை செய்யலாம்.
4) இரண்டாந் தர சந்தையில் வணிக வங்கிகளும் சில நிறுவனங்களும் அனுபவித்த தனியுரிமை நீக்கப்படும்.
5) நாடு பரவலாக திறைசேரி உண்டியலை வாங்கலாம்.

## தேசிய பாதுகாப்பு முறி

தேசிய பாதுகாப்புச் செலவினத்தை ஈடு செய்வதற்கான நிதியினைப் பெறும் நோக்குடன் அரசின் சார்பில் மத்திய வங்கியினால் இவை அச்சிட்டு விற்கப்படுகின்றது. ஆண்டிற்கு 15% வட்டியும் உழைத்துத் தருவதுடன் 3 ஆண்டு முதிர்வுக் காலத்தினையும் கொண்டிருக்கும்.

## திறைசேரி வைப்பு சான்றிதழ்
### *(Treasury Certificates of Deposits)*

1989 ஆம் ஆண்டு 9 இலக்க திறைசேரி வைப்புச்சான்றிதழ் சட்டத்திற்கு அமைய அரசு கடன்களை திரட்டிக் கொள்வதற்காக, அரசின் பொதுப்படு கடன் திணைக்களத்தினால் இது அச்சிட்டு வெளியிடப்படுகின்றது. 6 மாதம், 12 மாதம், 24 மாதங்களில் முதிர்வடையும் தன்மையுடைய இச்சான்றிதழ் 17-19 வீத வட்டியினை வருவாயாகப் பெற்றுத் தருகின்றது. இதற்கான வட்டியின் அளவு முதிர்வுக்காலம், பணத்தொகை என்பவற்றின் அளவால் தீர்மானிக்கப்படுகின்றது. இவை மத்திய வங்கியினாலும், தேசிய சேமிப்பு வங்கியினாலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இச்சான்றிதழ் திறைசேரிச் செலயளாளரினால் கையொப்பம் இடப்பட்டு இருக்கும். இவ் வைப்புச் சான்றிதழ் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்.

1) வைப்புக்கு அரச உத்தரவாதம்
2) வட்டியானது போட்டியினால் நிர்ணயிக்கப்படல்
3) பூரண பெயர் அறியப்படாத நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) கையளித்து மாற்றமுடிதல்
5) முதிர்ச்சிக் காலத்தில் தடுத்து வைக்கும் வரி இல்லை
6) முன் கூட்டியே வட்டி வழங்கல்.
7) 1000,2000,5000,50000,100000 முகவிலை என பல காணப்படுகின்றது.

## வணிகத்தாள் *OR* வர்த்தகப் பத்திரம் *(Commercial Papers)*

வரையறுக்கப்பட்ட கம்பனிகள் குறுங்கால நிதிப் பிரச்சனைகள் ஏற்படும் போது, அவற்றை நிவர்த்தி செய்வதற்காக மாற்றுண்டியல் சட்டத்துக்கு அமைய வெளியிடும் ஒரு வகை வாக்குறுதிப்பத்திரத்தினையே வணிகத்தாள் என்பர். இது 1993 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலும் அறிமுகமாகியுள்ளது. இது வைப்புச்சான்றிதழ் போன்ற குறுங்கால சேமிப்புக் கருவி ஆகும்.

### வணிகத்தாளின் பிரதான பண்புகள்

1) வரையறுக்கப்பட்ட கம்பனிகளால் வெளியிடப்படுதல்
2) மாற்றுண்டியல் சட்டப்படி பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.
3) 6,9 மாதங்களில் முதிரும் தன்மை உடையது.
4) தன்னிச்சையாக கை மாற்ற முடியும்.
5) முதிர்வுத் திகதிக்கு முன்னர் வணிக வங்கியில் கழிவு நீக்கம் செய்யலாம்.
6) கம்பனியின் சார்பில் வணிகவங்கிகள், நிதிக்கம்பனிகளே இவற்றின் விற்பனையில் ஈடுபடும்.
7) இதன் முக விலை 10,000 ரூபா ஆகும்.
8) உயர்ந்த கவர்ச்சியான வட்டி வீதம்.

### வணிகத்தாளை வெளியிட்டுள்ள கம்பனிகள்

1) வரையறுக்கப்பட்ட இலங்கை வியாபாரிகள் வங்கி
2) சிங்கர் கம்பனி
3) ஏயிற்கண் ஸ்பேன்ஸ் லிமிட்டெட்
4) ஜோன் கீல்ஸ் லிமிட்டெட்

## இலங்கை கடன் தகவல் பணியகம் *(Ceylon Credit Information Bureau)*

1990 ஆம் ஆண்டு இலங்கை கடன் தகவல் பணியகச்சட்டத்தின் கீழ் இது உருவாக்கப்பட்டது. கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவோர் தொடர்பான தகவல்களைச் சேகரித்து பேணுதல், பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை பணியகத்தின் பங்குடமையாளர்கள் கடன் வழங்கும் போது அவர்களின் வேண்டுகோளின் பேரில் கொடுத்துதவுதல் என்பன இதன் நோக்கமாகும். இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 10 கோடி ரூபா ஆகும். இதன் வழங்கிய மூலதனத்தில் மத்திய வங்கி 51 சத வீதமும், வர்த்தக வங்கிகள் 30 சதவீதமும், பிறகடன் நிறுவனங்கள் 19 சதவீதமும், பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. இதன் பணிப்பாளர் சபையில் 9 உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இதில் மத்திய வங்கியின் 2 பேர், இலங்கை வங்கி மக்கள் வங்கி, நிதிக்கம்பனி, தேசிய அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பணியகத்தின் முகாமையாளர் போன்றோரின் பிரதிநிதிகள் ஆகியோர் இதன் பணிப்பாளர் சபையில் உறுப்பினராகக் காணப்படுகின்றனர்.

## இப்பணியகத்தின் பிரதான தொழிற்பாடுகள்

1) கடன் பெறுவோர் பற்றிய தகவல்களைச் சேகரித்து, பேணுதல்.
2) கடன் வழங்கும் பங்குடமையாளர்களுக்கு கடன் பெறுவோர் பற்றிய தகவல் அளித்தல்.
3) கடன் வழங்கும் பங்குடமையாளர்களுக்கு இரகசிய கடன் விபரங்களை வழங்கல்.
4) ஒழுங்கு முறை சாராத துறைக்கு கடன் விநியோகத்துக்கு வசதி அளித்தல்.
5) கடன் வழங்கும் பங்குடமையாளர்களுக்கு தகவல் கொடுத்துதவியமைக்காக கட்டணம் அறவிடல்.
6) சொத்துக்களை குத்தகைக்கு விடல்.

### அரசமுறி (அரசபிணை)

இலங்கையின் மூலதனச் சந்தையில் நீண்டகால, நடுத்தர கடன்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தால் அச்சிட்டு, கேட்பு விற்பனையின் ஊடாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்ற ஒரு வகை கடன்கருவியே இதுவாகும். இது பின்வரும் பிரதான இயல்புகளை உள்ளடக்கி இருக்கும்.

1) வரவு செலவுத் திட்டத்தின் செலவில் ஒரு பகுதியினை நிதியிடுவதற்காக அரசாங்கம் பொதுமக்களிடம் இருந்து கடனைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் வழியாகும்.
2) காலத்திற்குக்காலம் மத்திய வங்கியினால் இத்தகைய முறிகள் விற்கப்பட்டு பணம் திரட்டப்படுகின்றது.
3) சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப முதிர்ச்சிக் காலமும், வட்டியும் வேறுபடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) வட்டி அரையாண்டுக்கு ஒரு முறை முதலீட்டாளனுக்குச் செலுத்தப் படும்.

5) இப் பிணைகள் திரட்டும் நிதி முதலீட்டாளர்களுக்கு மீளச் செலுத்தப் படுவதால் மிகவும் பாதுகாப்பான முதலீட்டாகும்.

6) பொதுப்படுகடன் திணைக்களத்திடம் இருந்தும் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிடம் இருந்தும் விண்ணப்பங்களைப் பெற்று பொதுமக்கள் இவற்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

## பேரூந்துக் கொள்வனவுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்
## *(Bus Purchase Loan Scheme)*

1990 ஆம் ஆண்டு சிறியநடுத்தரக் கைத்தொழில் கடன் திட்டத்தின் ஊடாக தேசிய அபிவிருத்தி வங்கியினால் செயற்படுத்தப்படும் மற்றொரு கடன் ஆகும். இக் கடன் திட்டம் வணிகவங்கிகள் அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி ஆகிய அமைப்புக்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தனியார் பேரூந்து தொழிற் பாட்டாளர் பேரூந்தின் பெறுமதியில் ஆகக்கூடிய 75 சதவீதம் வரையில் கடனாகப் பெறலாம். இக்கடனுக்கு வருடம் 18 சதவீத வட்டி அறவிடப்படும். அத்துடன் கடன் 5 வருடங்களில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். கடன் வழங்கும் நிறுவனங்களினால் வழங்கப்பட்டு மீளப் பெறப்படாத நிலையில் மொத்தக் கடனில் 50 சத வீதத்தினை விஞ்சாத தொகையொன்றை மத்திய வங்கி மீள் நிதியிடல் உத்தரவாதத்தின்படி தாம் நிதியிடல் வசதியினை அளிக்கும்.

கடன் பெறும் பேரூந்து தொழில் முயற்சியாளர்கள் கடன் பெற்ற தொகையினைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் இருந்து வரி அறவீடு இன்றி பேரூந்துகளை இறக்குமதி செய்யவும் அத்துடன் கடன் பெறப்பட்ட திகதியில் இருந்து 90 நாட்களில் ஈட்டு பிணை ஊர்தியினையும் பதிவுச் சான்றிதழ்களையும் கடன் வழங்கிய வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

## மீள் நிதியிடல்
## *(Re-Financing)*

இலாபகரமற்ற தொழில் முயற்சிகளுக்கு நிதி நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற கடன் தொகை உரிய காலத்தில் திரும்பப் பெற முடியாத நிலை ஏற்படுவதால் தொடர்ந்தும் இத்தகைய இலாபகரமற்ற தொழில் முயற்சிகளுக்கு வணிக வங்கிகள் கடன் வழங்க முன்வருவதில்லை. இதன் காரணத்தால் பொருளாதாரத்தில் இலாபகரமற்ற தொழிற்துறைகள் நிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்மையால் மிகவும் மோசமாக பாதிப்படைகின்றது. எனவே இத்தொழிற் துறைக்கு கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் ஆற்றலை அதிகரிக்கச் செய்வதற்காக மீள் நிதியிடல் வசதி அளிக்கப்படுகின்றது.

மீள் நிதியிடல் என்றால், நிதி நிறுவனங்களால் இலாபகரமற்ற முன்னுரிமைகளை உடைய தொழிற் துறைகளுக்கு கடன் வழங்கும் போது அக்கடன் வழங்கலுக்கு அளிக்கும் உத்தரவாதத்தை OR கடன் வழங்கும் நிதி நிறுவனங்களுக்கு மீள் நிதியிடல் வசதி அளிக்கும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் இலகு நிபந்தனையினையுடைய கடன் வசதியினைக் குறிக்கும். இவ்வுத்தரவாதத்தின்படி கடன் வழங்கப்பட்டு உரிய காலத்தில் திரும்ப அறவிடமுடியாத வேளையில், அக்கடனின் குறித்த தொகைக்கு தாம் பொறுப்பு என உத்தரவாதம் அளிப்பதை அல்லது வழமையாக கடனுககு அறவிடப் படும் வட்டி வீதத்தில் ஒரு பகுதியினை மீள் நிதியிடும் நிறுவனம் தாம் பொறுப்பேற்று நிதியிடப்படுவதை குறிப்பிடலாம். இதனால் வணிக வங்கி யின் அறவிடமுடியாக்கடனின் பங்கு குறைவடைவதுடன், கடன் பெறுவோ ரும் குறைந்த வீத வட்டியில் கடன் பெறும் வாய்ப்பும் கிடைக்கும். இலங்கை யில் பின்வரும் நிறுவனங்கள் மீள் நிதியிடல் வசதி அளித்து வருகின்றது.

1) இலங்கை மத்திய வங்கி
2) தேசிய அபிவிருத்தி வங்கி
3) ஏற்றுமதி கடன் வழங்கும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
4) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
5) அரச ஈட்டு முதலீட்டு வங்கி

இலங்கை மத்திய வங்கி நீண்டகால, நடுத்தரகால, குறுங்காலக் கடனுக்கு மீள் நிதியிடல் வசதியினை அளித்து வருகின்றது. மத்திய வங்கியி னால் பின்வரும் மீள் நிதியிடல் திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

1) புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்
2) ஏற்றுமதி கொடுகடன் மீள் நிதியிடல் திட்டம் (வகை 1,11)
3) நெல் மற்றும் பயிர்களை களஞ்சியப்படுத்துவதற்கான கடன் திட்டம்.
4) தேயிலைத் தொழிற்சாலை சொந்தகாரருக்கான சிறப்பு மீள் நிதியிடல் திட்டம்.
5) வறியவருக்கான வீடமைப்புக் கடன் மீள் நிதியிடல் திட்டம்.

இலங்கை மீள் நிதியிடல் மிகவும் பிரபல்யமான மற்றுமொரு நிறுவனம் தேசிய அபிவிருத்தி வங்கி ஆகும். இவற்றால் பின்வரும் 3 வகையான மீள் நிதியிடல் வசதிகள் செயற்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) சிறிய நடுத்தரக் கைத்தொழிலுக்கான கடன் மீள் நிதியிடல் (SMI)
2) பேருந்து கொள்வனவுக் கடனுக்கான மீள் நிதியிடல்.
3) கருவியினைக் கொள்வனவு செய்வதற்கான மீள் நிதியிடல்.

## மீள் நிதியிடல் திட்டத்தின் நோக்கம்

1) இலாபகரமற்ற தொழிற் துறைக்குக் கடன் வழங்கும் நிதி நிறுவனங்களை ஊக்குவித்தல்.
2) இலாபகரமற்ற தொழில் முயற்சியாளர்களுக்குக் கடன் பெறும் வாய்ப்பை அதிகரிக்கச் செய்தல்.
3) கடன் பெறும் தொழில் முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் பெற இயலச் செய்தல்.

## புதிய நான்கு ஆண்டு வைப்புச்சான்றிதழ்

1993 ஆம் ஆண்டு மத்திய வங்கி 4 ஆண்டுக்கு குறையாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட வைப்புச்சான்றிதழை அச்சிட்டு வெளியிட வணிக வங்கிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான நிபந்தனைகள் வருமாறு.

1) சான்றிதழின் முகப் பெறுமதி 100,000 ரூபாவுக்கு குறைவானதாக இருத்தல் கூடாது
2) வணிக வங்கிச் சான்றிதழின் ஊடாக சேகரிக்கப்பட்ட நிதி பொறிக் கொள்வனவு, நிர்மாணம் போன்ற துறைக்கு நீண்டகாலக் கடன் வழங்க வேண்டும்.
3) 4 ஆண்டுக்கு முன்னர் காசாக்கும் வேளையில் முத்திரை வரி விலக்கு பெறும் உரிமை உண்டு.

## உள்நாட்டு உண்டியல் திட்டம் *(Inland Bill Scheme)*

உள்நாட்டு தொழில் முயற்சியாளார்கள் எதிர் நோக்குகின்ற குறுங்கால திரவத்தன்மை இன்மை பிரச்சனையினை நீக்குவதற்காக 1989 ஆம் ஆண்டு மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். தற்போது வணிக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி ஆகிய அமைப்புக்களின் ஊடாக இத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. 1993ஆம் ஆண்டு வரையும் பின்வரும் இரண்டு வகையான முயற்சிக்கே இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1) தேயிலை தோட்டத்தொழில் முயற்சியாளர்.
2) நுவரெலியா மாவட்ட பாற் பண்ணை தொழில் முயற்சியாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு விற்பனையாளர், கொள்வனவாளர்களுக்கிடையே இவ் உண்டியல் பிறப்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது விற்பனையாளர் விற்பனைத் திகதியில் விற்பனைப் பெறுமதியினைக் குறிப்பிட்டு தவணையிடப்பட்ட உண்டியல் ஒன்றைப் பிறப்பித்துக் கொள்வனவாளர்களிடம் ஒப்படைக்கப்படும். இங்கு கொள்வனவாளரால் தமது உடன்பாட்டை வெளிக்காட்டி ஒப்புக் கொள்வார். பின்னர் கொள்வனவாளரால் தமது வணிக வங்கியில் ஒப்படைத்து உத்தரவாதத்தையும் பெற்றுக் கொடுப்பார். பின்னர் இவ் உண்டியலைப் பிறப்பித்த விற்பனையாளன் பொறுப்பேற்று தமது வணிக வங்கியில் கொடுத்து கழிவுடன் மாற்றிப் பணத்தைப் பெற்றுக் கொள்வார். அல்லது உண்டியலின் முதிர்வுத் திகதி வரை உண்டியலை வைத்திருந்து முழுப் பணத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

## இவ் உண்டியல் முறையினால் கிடைக்கும் நன்மைகள்

**அ) விற்பனையாளர்கள்**

1) கடன் விற்பனைக்கு ஓர் உத்தரவாதமாக அமைதல்
2) கடன் காலத்துக்கு முன்னர் பணம் தேவைப்படின் உண்டியலை கழிவு நீக்கம் செய்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
3) வணிக வங்கியில் கழிவுடன் பணமாக்குவதற்கான கழிவு வீதம் கடன் வட்டியிலும் விடக் குறைவானது
4) எல்லா கிளைகளிலும் பணமாக மாற்றும் வசதி உண்டு.

**ஆ) கொள்வனவாளர்கள்**

1) பிற்போடப்பட்ட கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.
2) கடன் கொள்வனவுப் பெறுமானத்துக்கு வங்கியின் உத்தரவாதத்தைப் பெறலாம்.

### மக்கள் வியாபாரிகள் வங்கி *(Peoples Marchant Bank)*

1983 ஆம் ஆண்டு இது இரண்டாவது வியாபாரிகள் வங்கி என்ற அடிப்படையில் மக்கள் வங்கி 75%, மற்றும் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த கின்னஸ் மகோண் அன்ட் கம்பனியினாலும் மூலதனம் இடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு கின்னஸ் மகோண் அன்ட் கம்பனி தனது பங்கை மக்கள் வங்கிக்கு முழுமையாக விற்பனை செய்தது. இதன் பின்னர் இவ் வங்கி மக்கள் வங்கியின் பூரண துணைக்கம்பனியாக மாறியது. அதனைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு மக்கள் வங்கி 39.2% அக்செப்டர் தொழில் மூலதன (இலங்கை) கம்பனி 15% யும், ஹற்றன் நஷனல் வங்கி 10%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் 10% யும் மூலதனமாகக் கொண்டு காணப்படுகின்றது. மீதி மூலதன அளவைப் பொதுமக்கள், ஊழியர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

### இதன் பிரதான தொழிற்பாடுகள்

1) கருத்திட்ட ஊக்குவிப்பு
2) தொழிலை அமைத்தல், நிதிசார் ஆலோசனை அளித்தல்
3) முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை அளித்தல்
4) நலிவுற்ற கம்பனிகளுக்கு புனர்வாழ்வளித்தல்.
5) கடன் பெற்றுக்கொடுத்தல்
6) வாடிக்கையாளர்களின் சார்பில் கடன் சேகரித்தல்
7) உள்ளூர் உண்டியலை கழிவு நீக்கல்
8) காப்புறுதி முகவராக தொழிற்படல்

## இலங்கை வியாபாரிகள் வங்கி லிமிற்றெட்
## *(Merchant Bank of Sri Lanka LTD)*

1982 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது வியாபாரிகள் வங்கியாக இது காணப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டில் மொத்த பங்கு மூலதனத்தின் 49 சத வீத பங்குகளை இலங்கை வங்கி ஈடுபடுத்தி இருப்பதுடன், மீதி 51 சதவீத பங்கு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு திரட்டப்பட்டது. அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கி, சிலிகோப் இன் வெஸ்ட்மன் சிங்கப்பூர் நிறுவனமும் மூலதனத்தை ஈடுபடுத்தி செயற்பட்டு வருகின்றது. 1991 ஆம் ஆண்டு கொழும்பு பங்கு பரிமாற்ற நிலையத்தில் பங்குகளை பரிமாற்றும் உரிமையினை உடைய பாரிய விலை கூறிய கம்பனி ஆகும். இக் கம்பனி பல உபதுணைக் கம்பனிகளை உருவாக்கி உள்ளது.

1. வியாபாரிகள் வங்கி பினான்ஸ் சேவை கம்பனி
*(MB Financing Services Ltd)*

அ) வங்கிகளுக்கிடையேயான அழைப்புச் சந்தையில் பணத்தரகுத் தொழிலில் ஈடுபட்டு பெரும்பங்கை ஆற்றுதல்.

ஆ) அரச திறைசேரி உண்டியலுக்கான முதலாந் தர வணிகர் (Prime Dealer) ஆகவும் செயற்படுகின்றமை.

இ) வியாபாரிகள் வங்கிகளுக்கான நிதியினை அளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கொழும்பு கிறடிட் கம்பனி லிமிட்டெட்,
*(Colombo Credit Co.Ltd)*

நிதிக்கம்பனிச் சேவை அளிக்கும் இக்கம்பனியின் மொத்த மூலதனத்தில் 51 சத வீதம் இலங்கை வியாபாரிகள் வங்கியினாலும், 49 சதவீதம் இலங்கை வங்கியினாலும் நிதியிடப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு மத்திய வங்கியினால் இவ் வங்கியினை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு இவ் வங்கி முயற்சியினை ஆரம்பித்தது.

3) லங்கா செக்குரிட்டி கொம்பனி லிமிற்றெட்
*(Lanka Secrities (Pvt) Ltd)*

இலங்கை வியாபாரிகள் வங்கி, இலங்கை வங்கி ஆகிய அமைப்புக்களினால் மூலதனமிடப்பட்டு பங்குத்தரகர் நிறுவனம் என்ற அடிப்படையில் இந்நிறுவனமானது ஆரம்பிக்கப்பட்டது.

## வைப்புக் காப்புறுதி *(Deposit Isurance)*

1987 ஆம் ஆண்டு மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட இக்காப்புறுதி திட்டத்தின்படி, நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களிடம் இருந்து ஏற்றுக் கொள்ளுகின்ற வைப்புக்களில் குறித்த வீதத்தை மத்திய வங்கிக்கு காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்தி, வாடிக்கையாளர்களின் வைப்புக்களுக்கு காப்புறுதி ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்படி வாடிக்கையாளர்களிடம் இருந்து ஏற்கப்படுகின்ற ஒவ்வொரு 100 ரூபா வைப்பிற்கும் 2 சதத்தை காலாண்டுக்கு ஒரு முறை மத்திய வங்கியில் வைப்பாக வைக்க வேண்டும். வங்கி முறிவடைந்தால் இத்திட்டத்தின்படி ஒரு லட்சம் வரை வாடிக்கையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும். இத்திட்டத்தில் வணிக வங்கி, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கி ஆகிய வங்கிகள் இணைந்துள்ளன.

### *வைப்பு காப்புறுதியினால் கிடைக்கும் அனுகூலங்கள்:*

1) வாடிக்கையாளர்களின் வைப்புக்களுக்கு பாதுகாப்பு உண்டு.
2) வங்கி வைப்புக்களில் நம்பிக்கை ஏற்படும்.
3) வங்கி முறிவடைந்தால் மத்திய வங்கி நட்டஈடு வழங்கும்.

## இலங்கை வங்கியின் மகளிர் பொற்கணக்கு

1992 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இதன் நோக்கமெல்லாம் பெண்களிடையே சேமிப்புப் பழக்கத்தை தூண்டுவதாகும். இத்திட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சேர்க்கப்படுவதுடன் அவர்கள் தமக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னுரித்துக்காரரையும் நியமிக்க முடியும். இக்கணக்கு சாதாரன சேமிப்புக் கணக்கை விட 1 சத வீத வட்டியும் கூடுதலாக வழங்கப்படும் இக் கணக்கு 3 முறைகளில் நடைமுறைப்படுத்தப்படும்.

1) 500 ரூபா ஆரம்பவைப்பாக இட்டு பின்னர் 250 ரூபா வீதம் மாதாந்தம் வைப்பில் இடல்.
2) ஒரே முறையில் 10,000 ரூபாவை வைப்பில் இடல்.
3) ஜனசத்தி உதவி பெறுவோர் மட்டும் ஆரம்ப வைப்பாக 200 ரூபா வைப்பில் இட்டு பின்னர் 100ரூபாவால் மாதாந்தம் வைப்பாக இட்டு வருதல்.

*இக்கணக்கை பேணுபவர்களுக்கு பின்வரும் நலன்கள்கிடைக்கும்.*

1) உயர்ந்த வட்டி
2) விசேட கடன் வசதி.
3) அதிஷ்டசாலிகளுக்கு இலவச பயணச்சீட்டு.

## பெற்றோருக்கான ஓய்வூதியத்திட்ட வைப்புக் கணக்கு

(உபகார)

பெற்றோரின் எதிர்கால நலன் கருதி பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்திய சேமிப்புத் திட்டம் இதுவாகும். முதன் முதலில் இலங்கை வர்த்தக வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின்படி 250 ரூபாவிற்கு குறையாத தொகையினை 66 மாதங்களுக்கு மாதாமாதம் வைப்புச் செய்ய வேண்டும். 66 மாத முடிவில் இருந்து ஓய்வூதியம் வழங்க ஆரம்பிக்கப்படும். இதன் சிறப்புயாதெனில் இவ்வைப்பினை ஆரம்பித்தவர் இடையில் இறப்பாரே ஆயின் 66 மாதத்திலிருந்து ஓய்வூதியம் வழங்கப்படும். உபகாரத்துக்கு நலனுடையவர் இறப்பாரே ஆயின், வைப்பும் அதற்கான வட்டியும் மீள ஒப்படைக்கப்படும்.

## இலங்கையில் சுங்க நடவடிக்கைகள் தொடர்பான மாற்றம்

1) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 22 (அ) பிரிவின் கீழ், ஒழுங்கு விதிகள் நியதிகளில் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை அவதானிப்பதற்கென பிஸ்கால் அறவீடுகளில் விலக்களிப்பு மீதான குழுவொன்று நியமிக்கப்பட்டது.
2) தேயிலை, இறப்பர், தெங்கு மீதான ஏற்றுமதித் தீர்வைகளை நீக்கும் வகையில் சுங்கச் சட்டங்களில் குறிப்பிடத்தக்க தன்மையுடைய மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டது.
3) தேயிலை ஏற்றுமதி மீதான உத்தரவுப்பத்திர முறை தளர்த்தப்பட்டது.
4) தங்கம், தங்காபரணங்களின் இறக்குமதி தாராளமயப்படுத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) இலங்கைப் பயணிகளுக்கும் பச்சை விளக்கு வழிவசதி விஸ்தரிக்கப்பட்டது.

6) இலங்கைக்கென தன்னியக்க சுங்கச்சரக்கு பதிதல் முறையொன்றைக் (Access) தாபிப்பதற்கான நடவடிக்கை முனைப்பாக்கப்பட்டது.

7) சட்டமீளாய்வு குழுவின் பணிப்புரையின் கீழ் புதிய சுங்க நடைமுறைகளின் அறிமுகத்திற்கான நகல் திருத்தங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

8) கணணி மயப்படுத்தப்பட்ட தரவு அடிப்படை முறையொன்றினை அறிமுகப்படுத்தியமை.

## ஊழியருக்கான விடுமுறைகள் *(Holidays For Employees)*

1) தொழிற்சாலை தொழிலாளர்கள் (Factory Workers)

ஞாயிற்றுக்கிழமைகளில் சம்பளம் உள்ளடக்கப்படாத விடுமுறை வழங்க வேண்டும். தொழிலாளர்களின் சம்மதத்துடன் இந்நாளில் வேலைக்கு அமர்த்தி இருப்பின் 11/2 மணிநேரம் கொடுப்பனவு வழங்க வேண்டும். அல்லது அக்கிழமைக் காலத்தில் வேறு வார நாட்களில் விடு முறை வழங்கப்பட வேண்டும்.

2) அலுவலகத் தொழிலாளர்கள் (Office Employees)

சனிக்கிழமைகளில் அரைநேர விடுமுறையும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநேர விடு முறையும் சம்பளம் உள்ளடக்கப்பட்டு வழங்க வேண்டும்.

3) போயா தினம் (Full Moon)

ஒவ்வொரு மாதமும் வரும் போயா தினம் சம்பளத்துடன் விடுமுறை வழங்க வேண்டும். தொழிலாளர்களின் சம்மதத்துடன் இத்தினத்தில் வேலைக்கு அமர்த்தப்படின் 11/2 நேர வீத சம்பளம் வழங்கப்பட வேண்டும். அத்துடன் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட பொது விடுமுறை (Public Holidays) களுக்கு வியாபாரத்துறை முழு கொடுப்பனவுடன் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

4) சம்பளத்துடன் சாதாரண லீவு (Leave)

அரச அலுவலக ஊழியருக்கு சம்பளத்துடன் 24 சமயாசம லீவு வழங்கப்படும். இவற்றைத் தொடர்ச்சியாக பயன்படுத்த முடியாது. அத்துடன் சுகயீன லீவு சில நிறுவனங்களில் 21 நாள் வரை வழங்கப்படுகின்றது. இதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அதிகாரியிடம் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) மகப் பேற்றுக்கான விடு முறை (Matternity Leave)

1) தொழிற்சாலை பெண் ஊழியர்கள் மகப் பேற்றுக் காலங்களில் 12 வாரங்கள் (84 வேலை நாள்) விடுமுறை சம்பளத்துடன் வழங்க வேண்டும். இது முதல் இரண்டு பிள்ளைகளுக்கு மாத்திரமே அனேக நிறுவனங்கள் வழங்குகின்றது.

2) தொழிற்சாலை பெண் ஊழியர்கள் மகப் பேற்றுக் காலங்களில் 2 அல்லது 2 மேற்பட்ட குழந்தைகளைக் கொண்டு இருப்பின், அவ் ஊழியருக்கு 6 வாரங்கள் (42 வேலைநாள்) விடுமுறை சம்பளத் துடன் வழங்கப்படும்.

3) அலுவலகப் பெண் ஊழியர்களுக்கு மகப் பேற்றுக் காலங்களில் 12 வாரங்கள் (84 வேலை நாட்கள்) சம்பளத்துடன் விடுமுறை வழங் கப்படும்.

## மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு (*Over Time*)

தொழிலாளர்களின் சம்மதத்துடன் மேலதிக நேரத்துக்கு வேலைக்கு அமர்த்தப்படின், வழமையான நேர வீதத்தின் 11/2 நேர வீதம் வழங்க வேண்டும். அலுவலக ஊழியரைப் பொறுத்தவரையில் அவரின் மொத்த சம்ப ளத்தை 200 ஆல் பிரித்து வருவதே வழமையான நேர வீதம் ஆகும். இதில் 11/2 நேரவீதம் கொடுக்கப்பட வேண்டும்.

$$\text{நேர வீதம்} = \frac{\text{மாதச்சம்பளம்}}{240}$$

## ஊழியர் நம்பிக்கை நிதியம் (*E.T.F*)

1980 ஆம் ஆண்டு 49 இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச்சட்டத்தின்படி அரச கூட்டுத்தாபனங்கள், தனியார் துறையிலுள்ள பின்வரும் தொழிலாளர் பிரிவினர்களின் நிரந்தர, தற்காலிக, துண்டு வேலை, ஒப்பந்த தொழிலாளர், தரகு சேவையாள், ஆகிய தொழிலாளர்களுக்கு சேவைக்கால முடிவில் திரண்ட அடிப்படையிலான நிதியினைப் பெற்றுக் கொடுப்பதற்காக அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படி தொழில் கொள்வோன் மாதாமாதம் தொழிலா ளியின் 3% தை இந் நிதியத்துக்குச் செலுத்தும் சட்டரீதியான கடப்பாட்டை கொண்டு காணப்படுவர். ஒரு நிறுவனத்தில் ஆகக்குறைந்தது 10 ஊழியரைக் கொண்டுள்ள தொழில் கொள்வோன் இந் நிதியத்துக்காக உதவு தொகையைச் செலுத்த வேண்டும் இதில் தேசிய தொழில் பயிலுநர் சபையின் பயிலுனர் தவிர்ந்த ஏனைய பயிலுநர்கள் இந் நிதி வசதியினைப் பெறும் உரிமையினைக் கொண்டிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந் நிதியத்தினால் ஊழியருக்கு கிடைக்கும் நன்மைகள்

1) சேவைக்கால முடிவில் திரண்ட நிதி கிடைக்கும்.
2) உதவு தொகைக்கு வட்டி கிடைக்கும்.
3) உதவு தொகைக்கு பங்குலாபம் கிடைக்கும்.
4) இறக்கும் போது இலவச ஆயுட்காப்புறுதி (50,000 ரூபா அல்லது 10 மாத ஊழியர் சம்பளம்) மூலம் இழப்பீடு கிடைக்கும்.
5) நிரந்தர இயலாமை கொடை (100,000 ரூபா அல்லது 24 மாத சம்பளம்) வழங்கப்படும்.
6) அவசர,இலவச இருதய சிகிச்சை, இலவச கண் சிகிச்சை போன்றவற்றுக் கான செலவினைப் பெற முடிதல். (சிறி ஜெயவர்த்தனபுர மருத்துவ மனையில் சிகிச்சை பெற வேண்டும்.)
7) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசிலில் சித்தியடையும் ஊழியரின் பிள்ளைக ளுக்கு 10,000 புலமைப்பரிசில் வழங்கல் (பணம் வங்கியில் வைப்பி லிடப்படும்)
8) தொழில் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களுக்காக இழப்பீட்டைப் பெற முடிதல்.

## புதிய தொழிலாளர் சாசனம் *(New Workers Charter)*

1995 ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அறிமுகப்ப டுத்தப்பட்டதே இதுவாகும். இது தொழிலாளர், தொழில் சங்கங்களின் உரிமை களைப் பாதுகாப்பதன் மூலம் தொழிலாளர்களின் சுரண்டல்களை கட்டுப்படுத் துவதே இதன் நோக்கமாகும். இதன் மூலம் தொழிலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. இது தொழில் கொள்வோன் தொழிலாளி அரசு, ஆகிய மூவரினதும் முக்கூட்டு இணக்கத்துடன் தயாரிக் கப்பட்டுள்ளது.

### தொழிலாளர் சாசனமொன்றின் உள்ளடக்கம்

1) தொழிலார்களின் தொழிற் சங்கங்களை ஆரம்பிக்கும் உரிமையினைப் பாதுகாத்தல்
2) தொழிலாளர் தொழிற் சங்கங்களில் இணைந்து செயற்படும் உரிமையி னைப் பாதுகாத்தல்
3) தொழில் கொள்வோன் தொழில் சங்க உரிமைகளுக்கு எதிராக செயற் படுவதைக் கட்டுப்படுத்தல்
4) தொழிற் சங்கம் இல்லாத தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல்
5) பெண் தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) தொழிலாளர் ஒருவரை 3 மாதத்திற்கு மேல் தற்காலிக உழியராக தொடர்ந்தும் வைத்திருப்பதைத் தடுத்தல்.
7) தொழிலாளரை வேலைக்கு நியமிக்கும் போது அவரது உரிமைகள், கடமைகளை உள்ளடக்கிய நியமனக்கடிதம் வழங்க வேண்டும் என வலியுறுத்தல்.
8) தொழிலாளர் பதிவேட்டு முறையை நடைமுறைப்படுத்தல்.

## அரச ஊழியருக்கான இலவச மருத்துவ காப்புறுதி
## *(Free Medical Insurance Scheme)*

1994 ஜுன் மாதம் நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரச சேவையாளர்களுக்கு பொது நிர்வாக அமைச்சினால் இலங்கை காப்புறுதித் கூட்டுத்தாபனத்தினூடாக இணைந்து நடைமுறைப்படுத்தப்படும் ஒரு காப்புறுதியேஇதுவாகும். இதன் பிரதான விபரங்கள் வருமாறு:

1) 4 இலட்சம் அரச சேவை ஊழியர்களுக்கு நன்மை கிடைக்கும்
2) பொது நிருவாக அமைச்சு, இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்துடன் இணைந்து செயற்படுகின்றது.
3) வருடாந்தம் 450 ரூபா கட்டணம் செலுத்த வேண்டும்.
4) திருமணமான குடும்பத்தில் கணவன், மனைவி, 21 வயதுக்கு மேற்படாத 2 பிள்ளைகள் உட்பட 4 அங்கத்தவர்கள் உடைய குடும்பம் ஒன்றுக்கு 22 ஆயிரம் வரை காப்புறுதி வழங்கப்படும்.
5) திருமணமாகாத குடும்பத்தில் 70 வயது வரையிலான பெற்றோர் 21 வயதுக்கு குறைந்த தொழிலற்ற சகோதரன், சகோதரிகள் இத்திட்டத்தில் அடங்கலாம் பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவு நடை பெறும்
    1) மருத்துவ விடுதிக் கட்டணம் 10,000 ரூபா வழங்கப்படும்.
    2) சத்திரசிகிச்சை அறைக்கான செலவு 3,500 ரூபா
    3) சத்திரசிகிச்சை மருந்து வைத்திய செலவு 6,250 ரூபா
    4) நோயாளர் ஒருவரை பரிசோதித்தல் 3,750 ரூபா
    5) கடுமையான நோயாளர் சிகிச்சை 4,750 ரூபா

## தொழிலாளியின் கடமைகள்

1) சட்டரீதியான கட்டளைகளை ஏற்றுக் கொள்ளல்.
2) உரிய நேரங்களில் வேலைக்குச் சமூகம் அளித்தல்
3) நிறுவனத்திற்கு விசுவாசமாக தொழிற்படுதல்
4) நிறுவனத்தின் சொத்தைப் பாதுகாத்துப் பேணல்.
5) வேலை நேரங்களில் மதுபானம் அருந்துதல், புகை பிடித்தல் போன்றவற்றைத் தவிர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) நிறுவனத்திற்கு எதிராகப் பிரச்சாரம் அல்லது துண்டு பிரசுரங்களை வெளியிடாது இருத்தல்.
7) ஊழல் நடவடிக்கையில் இருந்து விலகியிருத்தல்.

## தொழில் கொள்வோனின் கடமைகள்

1) உரிய திகதியில் அல்லது அதற்கு முன்பு சம்பளக் கொடுப்பனவு செய்தல்
2) தொழிலாளர் பதிவேடுகளை நிர்வகித்தல்.
3) மேலதிக வேலை நேரத்துக்கு 11/2 மணி நேர கொடுப்பனவு செய்தல் வேண்டும்.
4) பெண்களை வேலைக்கமர்த்துவதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றல்.
5) சம்பளத்துடன் மருத்துவ விடுமுறைகளை உறுதிப்படுத்தல்.

## தொழிலாளர் நலன் பேணும் சட்டங்கள்

### 1. 1954 ஆம் ஆண்டு 1ம் இலக்க கடைகள் காரியாலய சட்டம்.

சகல தனியார் கடைகள், காரியாலங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் தொழில் சார்பான நலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டது. காரியாலய ஊழியர் என்றால் வங்கி அமைப்பு, காப்புறுதி, சட்ட அலுவலகம், களஞ்சியசாலைகள், வைத்தியசாலை, சமூக நிறுவனங்கள், போன்றவை அடங்கும் ''கடை ஊழியர்'' என்றால் தனியார் துறை, மொத்த சில்லறை, வியாபாரத்தில் உள்ள ஊழியர்கள், மென்பான வியாபாரி பால் வியாபாரிகள், சிகை அலங்கார கடை, சிற்றுண்டிச்சாலை உணவகம் போன்றவை அடங்கும்.

### இச்சட்டத்தின் நோக்கம்

1) வியாபாரத்திலுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல்
2) வேலை செய்வதற்கான சூழல்களை ஏற்படுத்துதல்
3) வேலை நாட்களின் அளவை நிர்ணயித்தல். (வாராந்தம் 45 மணித்தியாலம்)
4) விடு முறை நாட்களின் அளவை நிர்ணயித்தல்
5) நேர வீதத்தை நிர்ணயித்தல்.
6) துண்டு வீதத்தை நிர்ணயித்தல்
7) மதிய போசன இடைவேளை, இளைப்பாறல், நேரம் மேலதிக நேர வீதம் போன்றவற்றை நிர்ணயித்தல்.
8) சம்பளம் குறிப்பிட்ட திகதியில் கொடுப்பதை உறுதிப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சட்டத்தின் கீழ் தற்போது தொழிலாளர் பெற்றிருக்கும் நலன்கள்

1) ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் வேலை செய்தல் - வார மொன்றிற்கு 45 மணிநேரம் வேலை செய்தல்
2) காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டும் கடை திறந்திருக்கலாம்.
3) சம்பளத்துடன் ஒரு கிழமைக்கு 1/2 நாள் விடுமுறை பெறலாம்.
4) வருடத்திற்கு 14 நாட்கள் சம்பளத்துடன் விடுமுறை
5) அரசினால் அறிவிக்கப்படும் பகிரங்க விடுமுறை.

2. 1993 ஆம் ஆண்டு தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டம்

தொழிற்சாலையொன்றில் வேலை நேரத்தில் விபத்து காரணமாக ஏற்படும் நட்டங்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க அரசால் இயற்றப்பட்ட சட்டம் ஆகும். இதன் படி பின்வரும் விபரம் முக்கியம் பெறுகின்றது.

1) மரணம் ஏற்பட்டால் 250,000 வரை நட்ட ஈடு
2) வேலையில் சேர்ந்து ஆகக் குறைந்தது 3 நாட்கள் இருக்க வேண்டும்.
3) மரணமடைந்து 3 நாட்களில் 5000 மரணச்சடங்கு செலவுக்கு செலுத்த வேண்டும்.
4) மரணமடைந்து 2 வருடத்தினுள் நட்ட ஈட்டை கோரலாம்.

3. 1950 ஆம் ஆண்டு கைத்தொழில் பிணக்குச் சட்டம்.

ஒரு நிறுவனத்திலேற்படும் கைத்தொழில் பிணக்குகளை சுமூகமான முறையில் தீர்த்து வைப்பதற்காக இச்சட்டம் உருவாக்கப்பட்டது. இச் சட்டம் பிணக்குகளை தீர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடும் உரிமையை தொழில் ஆணையாளருக்கு வழங்கியுள்ளது. இது 5 பிரதான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது.

1) தொழில் ஆணையாளருக்கான அதிகாரம் பொறுப்புக்கள் (1வது சரத்து)
2) கூட்டு விலைபேசல், கூட்டு உடன் படிக்கை தயாரித்தல்
3) தொழில் நியாய சபை தொடர்பான விபரம் (3வது சரத்து)
4) அத்தியாவசிய வேலை பிரகடனம் (4வது சரத்து)
5) பொது விடயங்கள் (5வது சரத்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) **1971 ஆம் ஆண்டு 45 ஆம் இலக்க ஊழியர் வேலை நீக்கச் சட்டம்**

நியாய மற்ற காரணங்களுக்காக வேலை நீக்கம் செய்யப்படும். தொழிலாளருக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் இச்சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி தொழில் ஆணையாளருக்கு நியாயமான காரணம் காட்டிய பின்பே தொழிலாளர் ஒருவரை வேலை நீக்கும் உரிமையினை தொழில் கொள்வோர் கொண்டிருப்பர்.

5. **1945 ஆம் ஆண்டு 45 ஆம் இலக்க தொழிற்சாலைச் சட்டம்**

(ஆலைகள் கட்டளைச்சட்டம்)

தொழில் சார்பான வேலை நேரங்களில் தொழிலாளர்களுக்கு போதுமான அடிப்படை பாதுகாப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இச்சட்டம் உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தினை அமுல்படுத்தும் அதிகாரத்தினை தொழில் ஆணையாளர் கொண்டுள்ளார். இச் சட்டத்தின்படி தொழிற்சாலை ஒன்று தொழில் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும். அத்துடன் பின்வரும் நோக்குடைய தொழிற்சாலை என்ற கருத்தினுள் இச்சட்டம் அடக்குகின்றது.

1) பண்டத்தை அல்லது பண்டத்தின் ஒரு பகுதியை உற்பத்தி செய்தல்.
2) தரப்படுத்தல் அல்லது பதப்படுத்தும் தொழில்.
3) பொருளை விற்கக்கூடிய நிலைக்கு கொண்டுவரல் (பொதியிடல்)
4) மிருகங்களை இறைச்சிக்காக வெட்டும் இடம்.

தொழிற்சாலை சட்டத்தின்படி பின்வரும் தொழிலாளர்களுக்கு தொழில் சார் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என கூறுகின்றது.

1) இயந்திரத்துடன் வேலைபுரியும் ஆட்களுக்கு பாதுகாப்பு.
2) மின்சார வேலையில் ஈடுபடும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு
3) பாரிய கனரக இயந்திரங்கள்/சூடாக்கல் இயந்திரங்களில் வேலை புரிவோருக்கு பாதுகாப்பு.
4) போதுமான தொழிலில் ஈடுபடக்கூடிய சூழலை உடைய அமைவிடம்.
5) இயந்திரம் நல்ல நிலையில் இருப்பதனை உறுதிப்படுத்தல்.

5) **1956 ஆம் ஆண்டு 47ஆம் இலக்க பெண்கள் சிறுபிள்ளைகளை வேலைக்கமர்த்தும் சட்டம்.**

பெண்கள், சிறுபிள்ளைகளை வேலைக்கமர்த்துவது தொடர்பாக தொழில் நிறுவனம் நிறை வேற்ற வேண்டிய சகல நிந்தனைகளையும் இச் சட்டம் உள்ளடக்கி இருக்கும் இச்சட்டத்தின் படி பின்வரும் பிரிவினர் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு பயனடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) 18 வயதிற்கு மேற்படாத கடற் சேவையில் ஈடுபடும் பெண்கள்.
2) 18 வயதிற்கு மேற்படாது இரா வேலையில் ஈடுபடும் பெண்கள்
3) 15 வயதிற்கு மேற்படாத சிறுபிள்ளைகள்
4) இளைஞர்களுடன் தொழில் புரியும் பெண்கள்.

1956 ஆம் ஆண்டு பெண்கள் சிறுபிள்ளைகள் சட்டத்தில் 1984 ஆம் ஆண்டு 32 இலக்கப் படி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி பெண்கள் சிறுபிள்ளைகளுக்கு பின்வரும் மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டது.

பெண்களுக்கான பாதுகாப்பு:-

1) பெண்களை சொந்த விருப்பில் வேலைக்கமர்த்த வேண்டும்.
2) 10 மணிக்கு பின் இரா வேலையில் ஈடுபடுவது ஆயின் தொழில் ஆணையாளரிடம் அனுமதி பெறல்
3) காலை 6 மணியில் இருந்து மாலை 6 வரை தொடர்ச்சியாக வேலை செய்தால் இரா வேலைக்கு அமர்த்த முடியாது.
4) பெண் மேற்பார்வையாளர்களை நியமிக்க வேண்டும்.
5) ஓய்வு அறை உணவு அறை என்பன வேறுபடுத்தப்பட்டு தனியாக இருத்தல் வேண்டும்.
6) இரா வேலை செய்தால் 11/2 நேர வீதம் சம்பளம் செலுத்த வேண்டும்.

## 6) 1983 ஆம் ஆண்டு 1ஆம் இலக்க பணிக் கொடைச் சட்டம்.

இதன் கீழ் பிரதானமாக தனியார் துறை ஊழியர்கள், அரச கூட்டுத்தாபன ஊழியர்களும் 5 வருடத்திற்கு மேல் ஒரே நிறுவனத்தில் வேலை செய்து விலகும் போது பணிக்கொடை பெறமுடியும் இது தொழிலாளியின் சேவையினை மதித்து வழங்கப்படும் சேவை மதிப்பு நன்கொடையாகும். பின்வரும் பிரிவினர் பெறமுடியாது.

1) வீட்டுப் பணிப்பெண்கள், பணியாட்கள்.
2) தனியார் வாகன சாரதிகள்.
3) ஊழியர் 15 பேருக்கு கீழ் உடைய நிறுவனங்களில்.

இந்த சட்டத்தின் கீழ் ஊழியர்கள் 2 பிரிவுகளுக்கு உட்படுத்தப்பட்டவர்.

1) மாதாந்த சம்பளம் பெறும் நிரந்தர ஊழியர்
2) நாளாந்த சம்பளம் பெறும் நிரந்தர ஊழியர்.

மேலே குறிப்பிட்ட பிரிவினருக்கு ஊழியர் பணிக்கொடை அளவுகள் வேறுபடலாம். பின்வருமாறு கணிப்பிடப்படும்.

1) மாதாந்த சம்பளம் பெறுவோர் கடைசியாகப் பெறக்கூடிய இறுதி மாத சம்பளத்தில் 1/2 பங்கினை சேவைக்கால வருட பெருக்கங்களால் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$\frac{\text{இறுதிமாதச்சம்பளம்}}{2} \times \text{சேவைக்கால வருடங்கள்}$$

2) நாளாந்த சம்பள அடிப்படையில் வேலை செய்யும் ஊழியராயின் கடைசியாகப் பெற்ற சம்பளத் தொகையில் 14 நாள் சம்பளத்தினைக் கணித்து சேவைக்கால வருடங்களால் பெருக்க வேண்டும்.

14 நாள் சம்பளம் x சேவைக்கால வருடங்கள்

## மக்கள் மயப்படுத்தல் *(Peoplaization)*

வர்த்தகத் தன்மை பொருந்திய அரசாங்க நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனியாக மாற்றுவது 1991 இல் ஆரம்பிக்கப்பட்டு மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இது ஏற்கனவே அரசாங்கத்தினால் நடை முறைப்படுத்தப்பட்ட தனியார் மயப்படுத்தல் திட்டத்தின் ஓர் விரிவான நிகழ்ச்சித்திட்டமாகவே கருதப்படுகின்றது. 1987 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனங்களையும், அரச உடமை நிறுவனங்களையும் பொதுக்கம்பனியாக மாற்றும் சட்டப்படி மக்கள் மயப்படுத்தல் மேற் கொள்ளப்பட்டது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனி என்றால் அரசாங்கத்துறை நிறுவனங்களின் மொத்த மூலதனத்தினை தனியார் துறையில் உள்ள நிறுவன முதலீட்டாளர்களுக்கு 60 வீத பங்கும், பொதுமக்களுக்க 30 வீத பங்கும், தொழிலாளர்களுக்கு 10 வீத பங்கும் என்ற அடிப்படையில் பங்குரிமை கூட்டு உரிமையில் ஒப்படைக்கும் ஓர் செயற்பாட்டை இது குறித்துநிற்கும். பங்குகள் யாவும் கேள்வி பத்திரமுறை (கேட்புமுறை) முறையிலும் மற்றும் பத்திரிகை யில் முன் விபரணம் வெளியிடப்பட்டு கொழும்பு பங்குச் சந்தையின் ஊடாக வும் விற்கப்படுகின்றது. இரண்டாவது முறை தற்பொழுது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது கேள்வி பத்திரமுறை மாத்திரமே நடைமுறையில் உள்ளது.

நிறுவன முதலீட்டாளர்களின் கேள்விப்பத்திரங்கள் யாவும் மதிப்பிடப் பட்டு அவர்களுக்கான பங்குகள் ஒதுக்கப்படும். இவ்வாறு பங்குகளை ஒதுக்கும் வேளையில் நிறுவன முதலீட்டாளர்களின் நம்பகத்தன்மை, மூலத னம், தொழில்நுட்ப அபிவிருத்தி, சந்தை வாய்ப்பு போன்றவற்றைக் கொண்டு வரக்கூடிய திறமை பிரதானமாக கவனத்தில் கொள்ளப்படும். இவற்றை கொண்டு வரக்கூடிய நிறுவன முதலீட்டாளருக்கே உயர்ந்த பங்குகள் அரசாங்கத்தினால் ஒதுக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மயப்படுத்தல் என்ற கருத்திற்கு அர்த்தம் வழங்கும் நோக்குடன் பொதுமக்களுக்கு 30% பங்குகளும், தொழிலாளர்களுக்கு 10% பங்குகளும் ஒதுக்கப்படுகின்றது. அரசின் கொள்கையின்படி தொழிலாளர்களுக்குரிய 10% பங்குகளும் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படு கின்றது. பொது மக்களுக்கு பங்குகள் விற்கப்படும் போது பத்திரிகையில் முன்விபரணம் வெளியிடப்பட்டு அவற்றின் ஊடாகவே பங்குகள் விற்கப்படு கின்றது. இம்முறை உடமையை உச்ச அளவில் பரவலாக்குவதை உறுதிப்படுத் துகின்றது. அரச நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தும் போது வழங்கவுள்ள பங்குகளை விட, கேள்வி அதிகமாக இருப்பதால் விண்ணப்பதாரி 200க்கு குறைவான பங்குகளையே பெறுகின்றனர். இதுவும் உடமையை உச்சமளவில் பரவலாக்கும்.

## தங்கப்பங்குடமையாளர்கள் *(Golden Share holders)*

பெருந்தோட்டங்களை தனியார் மயப்படுத்தும் போது தனியார் மயப்படுத்தல் நிபந்தனைகளுக்கமைய ஒவ்வொரு பிராந்திய பெருந்தோட் டக் கம்பனியிடமும் அரசு தனது உரிமையை வெளிப்படுத்த ஒரு தொகுதி பங்குகளை தனது உடமையில் வைத்து இருக்கும். இதனையே தங்கப்பங் குகள் *(Golden Share)* என்பர். இப்பங்கனைத்தையும். அடிப்படையாக கொண்டு ஆரம்பிக்கப்படும் ஒரு கம்பனியையே தங்கப்பங்குதாரரின் கம்பனி என அழைக்கப்படுகின்றது. இது தனியார் மயப்படுத்தப்பட்ட தோட்டங்க ளில் அரசுக்குள்ள உரிமையை உறுதிப்படுத்தும்.

## தனியார் மயப்படுத்தல் *(Privataization)*

அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்களை தனியாரிடம் ஒப்ப டைக்கின்ற அல்லது கையளிக்கின்ற ஓர் நடவடிக்கையினையே தனியார் மயப்படுத்தல் என அழைப்பர். நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் நட்ட அளவைக் குறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை ஆகும்.

## அரச தொழில் முயற்சி சீராக்கும் ஆணைக்குழு *(PERC) (Public Enterprises Reform Commission)*

இலங்கையிலுள்ள வணிகத் தன்மை பொருந்திய அரச உடமை நிறுவ னங்களை தனியார் மயப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் உருவாக்கப் பட்ட ஆணைக்குழுவே இதுவாகும். அரச தொழில் முயற்சிகளை சீராக்குவ தற்கு அரச பொருளாதாரக் கொள்கையில் கூடிய முன்னுரிமையினை வழங்கியுள்ளது. இதன்படி தனியார் துறையின் பங்கேற்புடன் ஏதேனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசதொழில் முயற்சிகளை தற்போதைய செயற்திறனை விட சிறப்பாக இயங்கச் செய்ய முடியும் என அரசு நம்புகின்றது இத்தகைய நடவடிக்கைக்கு தனியார் மயப்படுத்தல் (Privatization) இன்றியமையாத வழி முறையாகும்.

இவ் அமைப்பின் பிரதான குறிக்கோள்கள்

1) அரச முதலீட்டின் திறமைகளை மேம்படுத்தல்
2) சந்தையில் போட்டித்தன்மையினை உறுதிப்படுத்தல் (அரச தனியுரிமையை நீக்கல்)
3) தனியார் சேமிப்பு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதன் மூலம் மூலதனச் சந்தையை அபிவிருத்தி அடையச் செய்தல்.
4) அரச தொழில் முயற்சிகளின் உடமைகளை விரிவாக்கஞ் செய்தல்.
5) பொதுப்படுகடனைக் குறைப்பதற்கு உரிய மூலவளங்களைத் திரட்டுதல்
6) அரசின் மூலதனச் செலவின் பளுவினைக் குறைத்தல்.
7) அரச உடமைகள்/காணிகளை விற்பனை செய்தல் OR குத்தகைக்கு விடல்

## அரச முயற்சிகளை தனியார் மயப்படுத்தும் முறைகள்

1) அரச உடமை, சொத்துக்களைப் பகுதியாக OR முழுமையாக விற்றல் OR குத்தகைக்கு விடல்
2) அரச கம்பனிகளில் அரச பங்குகளை பகுதியாக OR முழுமையாக விற்பனை செய்தல்
3) தனியார் பங்களிப்புக்கும் போட்டிக்குமென புதிய துறை ஒன்றை ஆரம்பித்தல்.
4) முகாமை, தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல் போன்ற நிபுணத்துவத்தை ஏற்படுத்த தனியார் துறையுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்.

## தனியார் மயப்படுத்த உத்தேசித்துள்ள தனியுரிமையுடைய அரச நிறுவனங்கள்

1) சிறிலங்கா டெலிகொம்
2) இலங்கை மின்சார சபை
3) எயார் லங்கா நிறுவனம்

## தனியாருக்கு பங்குகளை விற்று தனியார் மயப்படுத்திய அரச நிறுவனங்கள்

1) மூலதன அபிவிருத்தி முதலீட்டு கம்பனி
2) தேசிய அபிவிருத்தி வங்கி
3) சிலோன் கிளாஸ் கம்பனி லிமிட்டெட்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

4) பெல்வத்தை சீனிக் கம்பனி
5) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
6) இலங்கை ஹொட்டேல் கூட்டுத்தாபனம்
7) லங்கா பொஸ்பரஸ் லிமிட்டெட்.

**தனியார் மயப்படுத்தலால் பின்வரும் பிரிவினருக்கு கிடைக்கும் நன்மைகள்**

A) அரசாங்கம்

1) அரச நிறுவனங்களின் பங்குகளை விற்பதால் கிடைக்கும் பணம் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை நிரப்பும்.
2) அரச நிறுவனங்களின் நட்டச் சுமையை ஏற்பதில் இருந்து அரசு விடுபடுவதால் அதிக பணத்தைச் சேமிக்கலாம்.
3) இந் நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் போது வரி விதிப்பு மூலம் அரசுக்கு வரி கிடைக்கும்.
4) சமூக விருத்தி, மக்களின் வாழ்க்கை நிலமை மேம்படும்.
5) வேலைவாய்ப்பு, அன்னிய செலவானி உழைப்பு அதிகரிக்கும்.

B) தொழிலாளர்

1) போட்டி காரணமாக தொழில்வாய்ப்பு கூடும்.
2) தொழிலாளர்களின் தரத்திலும் முன்னேற்றம் ஏற்படும்.
3) இலாபம் ஈட்டுவதால் தொழிலாளருக்கு இலாபப் பங்கு கிடைக்கும்.
4) பதவி உயர்வுகள் கிடைக்கும்
5) நவீன தொழில் நுட்பங்களை அறிய முடியும்.

C) பாவனையாளர்

1) தட்டுப்பாடு இன்றி தாரளமாக பொருட்கள், சேவைகளைப் பெற முடியும்.
2) முன்னரை விட தரம் கூடிய பொருட்கள் சேவைகளைப் பெற முடிதல்.
3) போட்டி காரணமாக மலிவு விலையில் பெற முடிதல்.
4) நிறுவனம் நட்டமடைதல் குறைந்து இலாபமீட்டுவதால் நியாய விலைக்கு பொருட்களை வாங்க முடிதல்.

**தனியார் மயப்படுத்துவதால் கிடைக்கும் பிரதிகூலங்கள்**

1) அத்தியாவசிய சேவைகள் பாதிப்படையும்.
2) பொதுமக்களின் நலன் பாதிப்படையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) தொழிலாளர்கள் வேலைநாட்கள், விடுமுறை நாட்கள், சம்பளம் போன்றவற்றில் சுரண்டப்படுவார்கள்.
4) செலாவணிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுதல்.
5) தொழிலாளர் பாதுகாப்பற்றவராக ஆக்கப்படுவர்.
6) வளங்கள் உச்சலாப நோக்கத்திற்கே பயன்படுத்தப்படும்.

## வர்த்தகமயப்படுத்தல் *(Commercialisation)*

வணிகத்தன்மை பொருந்திய அரசவுடமை நிறுவனங்களை இலாப கரமான தொழில் முயற்சியாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நிறுவன ரீதியான மாற்றத்தைக் குறிக்கும்.

இதன்படி சேவை நோக்குடன் செயற்பட்டுவந்த அரச திணைக்களங் கள் கூட்டுத்தாபனங்களாகவும், கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்பட்ட அரச கம்பனியாகவும் மாற்றும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கை காரணமாக அரச நிறுவனங்களுக்கு கிடைக்கும் அனுகூலம்.

1) அரச தலையீடுகள் குறையும்.
2) தனியாருடன் சிறந்த போட்டியிடல்
3) இலாப உழைப்பு கூடிய தொழிற் துறையில் அதிக அக்கறை ஏற்படும்.
4) தொழிலாளர்களை தனிப்பட்ட முறையில் ஊக்குவிக்கக் கூடியதாக இருத்தல்.
5) பல வழிகளில் மூலதனம் பெறல்.
6) திறைசேரியின் நிதிக்கட்டுப்பாடுகள் தவிர்த்தல்.
7) வளங்களின் பயன்பாட்டை உச்சப்படுத்தல்.

(உ+ம்) தொலை தொடர்புத்திணைக்களம் தொலை தொடர்புக் கூட்டுத்தாப னமாக மாற்றப்பட்டது.

## இலங்கை போக்குவரத்து சபை மக்கள் மயப்படுத்தல்

இலங்கை போக்குவரத்து சபை கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட பாரிய இழப்புகளை நிவர்த்தி செய்யும் நோக்குடனும் தொழிற்பாட்டு திறமையுடையதும், நிதி உறுதிப்பாட்டினைக் கொண்டதுமான போக்குவரத்து சபையாக மாற்றி அமைக்கும் நோக்குடன் 1990 டிசம்பர் மாதம் மக்கள் மயப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்மக்கள் மயப்படுத்தல் முயற்சியின்படி இலங்கையில் உள்ள பேரூந்துச் சாலைகளை 40-50 சுதந்திர அமைப்புக்களாக நிறுவ போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமையில் ஊழியர் செயற்திறனுடன் செயற்படுவதை ஊக்குவிக்கத் தொழிலாளர்களினால் நியமிக்கப்பட்ட நிர்வாகசபை ஒன்றினால் நாளாந்த நிர்வாகம் கொண்டு நடாத்தப்படும்.

மூலதன வழங்கலில் ஆரம்பத்தில் மொத்த பங்குகளில் 50 சத வீதமானவை கட்டணம் எதுவும் இன்றி ஊழியர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பின்னர் மீதி 50% பங்குகளும் நிதி நிறுவனங்களின் பொறுப்பில் வைக்கப்படும். பின்னர் 3 ஆண்டுக்கு பின்னர் 5 ஆண்டுக்கு முன்பும், மீதி 50% தொழிலாளருக்கு மாற்றிக்கொடுக்கப்படும். இதன் மூலம் இம்முயற்சியில் இறுதி உரிமையாளன் ஆவதற்கு இடம் அளிக்கின்றது. ஆரம்பத்தில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் ம் திகதி இரத்மலானை, நீர்கொழும்பு, கண்டி தெற்கு ஆகிய மூன்று டிப்போக்களும் மக்கள் மயப்படுத் தப்பட்ட கூட்டு நிறுவனங்களாக மாற்றப்பட்டது. இவ்வாறு மக்கள் மயப்படுத் தப்பட்டிப்போக்கள் இலாபத்தில் செயற்பட்டு வருகின்றது.

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
## *(National Transport Commission)*

இலங்கையில் பிரயாணிகள் போக்குவரத்தை கட்டுப்படுத்தி நிர்வகிப் பதற்கும் தரத்தை உறுதிப்படுத்துவதற்குமாக 1991 ஆம் ஆண்டு இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் ஆணைக்குழுவில் 3 அரச பிரதிநிதிகளும் 5 போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதிகளும், உறுப்பினராக காணப்படுகின் றனர்.

இவ் அமைப்பின் நோக்கம் பிரயாணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய போக்கு வரத்துக் கொள்கையை திட்டமிடுவதும் அதனை உரிய நிறுவனங்கள் மூலம் செயற்படுத்துவதுமே ஆகும்.

இவ் ஆணைக்குழுவின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு:-

1) பாதைகளுக்கான அனுமதிப்பத்திர நியதிகளை வரையறுத்தல்.
2) பாதைகளுக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கல்
3) சேவையாளர்கள் அனுமதிப்பத்திர நியதிகளுக்கமைய செயற்படுகின் றார்களா என்பதை மேற்பார்வை செய்தல்.
4) சாரதி, வாகனங்களுக்கான தகமைகளை தீர்மானித்தல்
5) சிக்கனமற்ற பாதைகள் மீதான தேவையை உறுதிப்படுத்தல்.
6) பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டை உறுதிப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்தை அபிவிருத்தி செய்தமைக்கான காரணங்கள்

1) கைத் தொழில் நடவடிக்கைகள் அதிகரித்தமை
2) ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தின் விருத்தி
3) மொத்த, சில்லறை வர்த்தகத்தின் விருத்தி
4) உள்ளூர் சந்தைகளின் விருத்தி
5) சனத் தொகை அதிகரிப்பு
6) வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தமை
7) உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி
8) வெளிநாட்டு முதலீடுகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் போன்றவை அதிகரித்தமை

## தெருப்போக்குவரத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

1) இலங்கை போக்குவரத்துச் சபை மக்கள் மயப்படுத்தப்பட்டமை
2) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உருவாக்கப்பட்டமை
3) பெருந் தெருக்கள் திணைக்களம் அதிகார சபையாக மாற்றப்பட்டமை.
4) பிரதான வீதிகள் சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் விரிவாக்கப் பட்டமை.
5) பிரதான வீதிகளில் சர்வதேச பாதைக்குறியீடுகள் பயன்படுத்தப் பட்டமை
6) மாகாண பஸ் போக்குவரத்து அமைச்சு உருவாக்கப்பட்டமை.
7) சாரதி அனுமதிப்பத்திரம், அடையாள அட்டை வடிவில் மாற்றப் பட்டமை.
8) புதிய இடம் காட்டும், தூரம் காட்டும் கற்கள் நிறுவப்பட்டமை.

## விமானப் போக்குவரத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

01) புதிய நவீன விமானங்களைக் கொள்வனவு செய்தமை.
02) புதிய நகரம், பாதைகளில் சேவைகள் ஆரம்பிகப்பட்டமை.
03) உள்நாட்டு விமானச் சேவையை நடத்த தனியாருக்கு அனுமதித்தமை
04) விமான நிலையம் நவீன மயப்படுத்தப்பட்டமை.
05) விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் அதிகளவு பயணிகளை கையாளக்கூடிய வகையில் விரிவாக்கப்பட்டது.
06) விமானம் தரித்து நிற்பதற்கான வசதி அதிகரிக்கப்பட்டமை.
07) வெளியேறுவதற்காக விசேட வாயில் திறக்கப்பட்டது.
08) ஏயார் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டமை.
09) ஏயார் லங்கா நிறுவனம் பிராந்திய அலுவலங்களை ஏற்படுத்தியமை.
10) கட்டு நாயக்காவில் நடைமுறையில் உள்ள ராடரோடு பீதருதால காலாவில் இரண்டாவது ராடர் பொறுத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) ஹிங்குரான் கொடையில் புதிய விமான நிலையம் அமைக்க தீர்மானிக் கப்பட்டது.

## புகையிரத போக்குவரத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

01) பழைய புகையிரதப் பாதைகள் திருத்தப்பட்டமை.

02) பாதைகள் புதிய பிரதேசங்களுக்கு நீடித்தல்

உ+ம் மாத்தறையிலிருந்து - கதிர்காமம் வரை மட்டக்களப்பிலிருந்து - பொத்திவில்வரை

03) புகையிரத திணைக்களத்தை ஓர் அதிகார சபையாக மாற்றத் தீர்மானித் தமை

04) புதிய நவீன புகையிரத இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை

05) புதிய வசதிகள் கூடிய பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டமை

06) சைகை விளக்கு முறைகள் நவீன மயப்படுத்தப்பட்டமை

07) கொள்கலன் புகையிரத சேவை அறிமுகப்படுத்தப்பட்டமை

08) புகையிரத ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டமை

09) மின்சார புகையிரத சேவையை ஆரம்பிக்க தீர்மானித்தமை

10) மூன்று வழிப்பாதை நிர்மாணிக்கப்பட்டமை

(உ+ம்) மருதானை ----- றாகமை

11) நெருக்கடி அற்ற நேரங்களில் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்ய வசதி அளித்தல்

## கப்பல் துறைமுக நடவடிக்கையில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

1) புதிய துறைமுகங்கள் உருவாக்கியமை.

2) தீர்வைப் பகுதிகள் முழுவதையும் கணணிமயப்படுத்தியமை.

3) பொருட்களை ஏற்றி இறக்க புதிய கருவிகள், உபகரணங்கள் பொருத் தப்பட்டமை.

4) புதிய கப்பல் திருத்தும் துறைகள் (உலர் மேடை) அமைக்கப்பட்டமை.

5) கப்பல் கூட்டுத்தாபனம் மக்கள் மயப்படுத்தப்பட்ட பொதுக்கம்பனி யாக மாற்றம் செய்யப்பட்டமை.

6) ஜெயா கொள்கலன் இறங்கு துறை 1ம், 2ம் கட்டங்கள் ஜப்பானிய உதவியுடன் நிறை வேற்றப்பட்டுள்ளது 3ம் கட்டம் அன்மையில் நிறை வேறிய நிலையிலும், 4ம் கட்டம் முடிவடையும் நிலையிலும் உள்ளது.

## இன்ரநெற் தொடர்பாடல் *(Inter Net Communication)*

சர்வதேச ரீதியாக கணணி (Computer) மூலம் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட சகல தகவல்களையும் தேவையான நேரங்களில் கணணி மூலம் பெற்றுக் கொள்ளப் பயன்படும் தொடர்பாடலாக **Inter Net** காணப்படு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்டர் நெட்டின் மூலம் சேவையைப் பெற, இன்டர் நெட் வசதியைத் தரும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். அத்துடன் இவர்களிடம் பணம் கட்டி சந்தாதாரர் ஆக வேண்டும். பின்னர் இன்டர் நெட்டை இயங்கு வதற்கு எமது கணணியை தொலைபேசி மூலம் டயல் செய்து, இன்டர் நெட் வசதியை வழங்கும் கணணியுடன் இணைத்துக் கொள்ளல் வேண்டும். இன்டர் நெட் வசதியை வழங்கும் கணணியாக ஹோஸ்ட் (Host) என்ற இன கணணி முக்கியம் பெறுகின்றது. இவ்வாறு இன்டர் நெட்டில் நுழைவதற்கு ஒவ்வொருவருக்கும் லொக்கின் குறியீடு (Login Name) தெரிந்து இருக்க வேண்டும். இவ்வாறு இன்டர் நெட்டில் நுழைந்த பின்னர் டைப் பண்ணி ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட பாஸ் வேர்ட் (Pass Word) குறியீட்டை டைப் பண்ணி எங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள முடியும். பின்னர் ஒவ்வொரு தகவலுக்குமான குறியீடுகளை டைப் பண்ணி தேவையான காலநிலை, விமானச்சேவை, பங்குச்சந்தை, நாணய மாற்று, சகல நாட்டு பத்திரிகை, சஞ்சிகை போன்றவை பற்றிய விபரங்களைப் பெற முடியும். வெளிநாட்டு பல்கலைக்கழகம், வாசிகசாலைகளில் இன்டர் நெட் கணணிகளை அவதானிக்கலாம். இலங்கையில் லேக்கவுஸ் பத்திரிகை களை இன்டர் நெட்டில் சர்வதேச ரீதியாக உடனுக்குடன் பார்க்கமுடிகின்றது.

## அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம் *(Unit Trust)*

பங்குச் சந்தையில் பிரதான நிறுவனமாக அலகு பொறுப்பாட்சி நிறுவ னம் காணப்படுகின்றது. சிறிய பங்கு முதலீட்டாளர்களின் பங்கு முதலீட்டுத் தொகையினை ஒன்றிணைத்து, ஒருங்கு சேர்த்து சட்டப்படி செயற்படும் நிறுவனம் ஆகும். பங்குச் சந்தையொன்றில் கொடுக்கல் வாங்கல்கள் வரையறுக்கப்பட்ட அளவில் இருக்கும் பொழுது அல்லது பங்குக் கொள்வ னவு பெருமளவு இல்லாது இருக்கும் வேளையிலும் அலகு பொறுப்பாட்சி நிறுவனம் முக்கியம் பெறுகின்றது. இவை பெருமளவு பணத்தைச் செலவிட்டு பெருந்தொகைப் பங்குகள் அல்லது சரக்கு முதல்களைக் கொள்வனவு செய்து, மக்களுக்கு சிறிய அளவில் தேவைக்கேற்ப வழங்குகின்றன. அத்துடன் பங்கு இலாபம் முதலீட்டுத் தொகைக்கேற்றப பங்கு இலாபம் வழங்கப்படும்.

### அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்துடன் 3 பிரிவினர் தொடர்புபடுவர்.

1) **அலகு உடமையாளர் :-** அலகு பொறுப்பாட்சி நிறுவனத்தின் அலகு உடமைகளை கொள்வனவு செய்து முதலீட்டினை மேற்கொள்ளும் முதலீட்டு உடமையாளர்களைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) **அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம் :-** அலகு உடமையாளரின் முதலீட்டு பணத்தைப் பொறுப்பேற்றல், வைத்துப்பாதுகாத்தல், முதலிடுதல், மீளளிப்புச் செய்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடும் அமைப்பை இது கருதும்.

3) **முகாமைக் கம்பனி:-** அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்தின் திட்டங்களை செயற்படுத்தும் அமைப்பே இதுவாகும். அலகுப் பங்கு டமை தொடர்பாக விற்றல், மீள் கொள்வனவு செய்தல், கணக்கு வைப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கம்பனி ஆகும்.

**(உ+ம்)** தேசிய ஒப்புரவு நிறுவனத்தின் முகாமைக்கம்பனி, தேசிய சொத்துடமை நிறுவனம்.

பங்கு முதலீட்டாளர்கள் நேரடியாக முதலீடு செய்யாமல் இவ்வாறு அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களின் ஊடாக முதலீடு செய்ய ஆரம்பிக்கும் பொழுது கிடைக்கும் அனுகூலங்களாவன

1) பணத்தைக் குறைந்த செலவில் முதலீடு செய்யலாம்.
2) பாதுகாப்பான பண முதலீடு.
3) முதலீட்டு இழப்பு அல்லது அபாயம் குறைவாக இருக்கும்
4) இலாப அளவு உச்சப்படுத்தப்படும்.
5) முதலீட்டாளர்களுக்கு நிர்வாக ரீதியாக எதுவித கடமைகளும், பணிகளும் இருப்பது இல்லை.
6) முதலீட்டினை காலதாமதமின்றி பணமாக மாற்றிக் கொள்ளலாம்,.
7) அரசின் வரிச் சலுகைகளும் ஊக்குவிப்புக்களும் உண்டு.

## மத்திய வைப்புத் திட்டம்
## *(Central Depository Systems) (C D S)*

இரண்டாம் தரப்பங்குச்சந்தையின் பங்கு கொடுக்கல் வாங்கல் நடவடிக் கைகளைத் துரிதப்படுத்துவதற்கும், காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்வ தற்கும் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்டதாகும். இத்திட்டத்தை செயற்படுத்து வதற்காக கொழும்பு பங்கு பரிமாற்று நிலையத்தால் 1991 ஆம் ஆண்டு அறிமு கப்படுத்திய கம்பனியாக ''வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பு முறைகள் கம்பனி'' (The Central Depository Systems (Pvt) Ltd.) உருவாக்கப்பட்டதாகும். இக்கம்பனி பங்குகளை விற்பனை செய்ய விரும்புகின்றவர்களின் பங்குபத்தி ரங்களை அவை விற்பனை செய்யும் காலம் வரையும் நம்பிக்கைப் பொறுப் பாக வியாபாரத்தளத்தில் வைத்திருப்பதே, இக்கம்பனியின் பிரதான குறிக் கோளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திட்டத்தின்படி பங்குகளை விற்பனை செய்ய விரும்புவர்களும், கொள்வனவு செய்ய விரும்புபவர்களும் பங்குச் சந்தைத் தரகர் ஊடாக மத்திய வைப்புத்திட்டத்தில் கணக்கு ஒன்றினை ஆரம்பிக்க வேண்டும். பங்குகளை விற்பனை செய்ய விரும்புபவர்கள் பங்குச் சான்றிதழ்களை மத்திய வைப்புக் கம்பனியிடம் ஒப்படைக்க வேண்டும். பங்குகள் விற்கப்படும் போது விற்பனையாளரின் கணக்கு வரவு வைகைப்படும், கொள்வனவாளர்களின் கணக்கு செலவு வைக்கப்படும். பங்குச் சான்றிதழ் கம்பனியால் பாதுகாப்பாக வைக்கப்படும். தேவை ஏற்படும் பொழுது பங்குக் கொள்வனவாளர் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர். அனைத்து நடவடிக்கைகளும் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது.

## மத்திய வைப்புத்திட்டக் கம்பனியின் நோக்கம் அல்லது பங்களிப்பு

1) வியாபாரத்தளத்தில் நடைபெறும் பங்கு கைமாற்றல் பூரணமாகும் வரை பங்குப் பத்திரத்தை நம்பிக்கையாக வைத்து இருத்தல்.
2) பங்கு கொடுக்கல் வாங்கல் தொடர்பான கணக்குகளை வைத்திருத்தல்.
3) ஒவ்வொரு பங்குதாரர் தொடர்பான கணக்குகளை வைத்திருத்தல்
4) புதிய பங்குதாரரைப் பதிவு செய்தல்.
5) மாதாந்தக்கணக்குக் கூற்றுக்களைப் பதிவு செய்து பங்குதாரருக்கு அனுப்புதல்.
6) பங்குப்பரிமாற்றம் தொடர்பாக பணக்கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்தல்.
7) பங்குப்பரிமாற்றத்தால் ஏற்படும் செலவுகளைக் குறைத்தல்.
8) பங்குப்பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் பெற உதவுதல்.
9) நாளொன்றிற்கான பரிமாற்றப்படும் பங்குகளின் எண்ணிக்கையின் அளவை அதிகரித்தல்.
10) பங்குப் பரிமாற்றத்தில் செம்மை, விரைவு போன்றவற்றை ஏற்படுத்தல்.

## பங்கு விலைச் சுட்டெண் (*Share Price Index*)

பங்குகளின் விலையில் ஏற்பட்ட மாற்றங்களை மதிப்பிடுவதற்காக கொழும்பு பங்குப் பரிமாற்று நிலையம் (Colombo Stock Exchange) பங்கு விலைச் சுட்டெண்களை 1985 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணித்து வருகின்றது. இவ் அமைப்பில் பங்கு விலைச்சுட்டெண்கள் இரண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1) முழுப்பங்குகளையும் உள்ளடக்கிய பங்குவிலைச் சுட்டெண் (Wholesale Price Index)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) உணர்வுப் பங்குகளை உள்ளடக்கிய பங்குவிலைச் சுட்டெண் (Sensitive Price Index)

முழுப் பங்குகளையும் உள்ளடக்கிய விலைச்சுட்டெண் என்றால், கொழும்புப்பங்குப் பரிமாற்ற நிலையத்தின் விலை கூறலைப் பெற்ற சகல கம்பனிகளினதும் விலை மாற்றங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட சுட்டெண் ஆகும். ஆனால் உணர்வுப்பங்குகளை உள்ளடக்கிய பங்கு விலைச்சுட்டெண் என்றால், தெரிவு செய்யப்பட்ட முதலாந்தர ஆபத்துக் குறைந்த 25 விலை கூறிய கம்பனிகளின் பங்கு விலையினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். இது பங்குச்சந்தையில் உணர்வு பூர்வப்பங்குகளின் விலைகளை உள்ளடக்கியிருப்பதால் இச்சுட்டெண் பங்கு விலை மாற்றத்தைச் சிறப்பாக வெளிக்காட்டும்.

## ஆவணப் பரிமாற்றுச் சபை *(Securities And Exchange Council)*

இலங்கையின் பங்குப் பரிமாற்ற நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டு ஆவணச் சபைச்சட்டத்துக்கு அமைவாக ஆவண சபை அல்லது பிணைகள் பேரவை (Securities Council) என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு 1991 ஆம் ஆண்டு சட்டத்தில் கொண்டு வரப் பட்ட திருத்தத்துக்கமைய ஆவண பரிமாற்றுச் சபை எனப் பெயர் மாற்றப் பட்டதாகும். இச்சபையில் பின்வரும் உறுப்பினர் காணப்படுகின்றனர்.

1) மத்திய வங்கியின் ஆளுனர்
2) கம்பனிப் பதிவாளர்
3) திறைசேரியின் செயலாளர்
4) வரைவு பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் தலைவர்.
5) அமைச்சர்களின் உறுப்பினர்.

## இச் சபையின் பிரதான குறிக்கோள்கள்

1) நியாயமான பங்குப் பரிமாற்றத்துக்கு உதவுதல்.
2) முதலீட்டாளர்களின் நிதி நலன்களைப் பாதுகாத்தல்
3) நட்டஈட்டு நிதியை நிர்வகித்தல்
4) உயர் தொழில்களின் தராதரத்தைப் பேணுதல்
5) பங்குச் சந்தையினைக் கட்டுப்படுத்தி, மேற்பார்வை செய்தல்.

## இச்சபையின் தொழிற்பாடுகள்

1) வியாபாரத்தளத்தை நிர்வகித்தல்
2) பங்குத்தாரருக்கு அனுமதியளித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பங்குப் பரிமாற்று நிலையங்களுக்கு அனுமதியளித்தல்.
4) பங்குப் பரிமாற்று பணிப்புரைகளை வழங்கல்.
5) பங்குப் பரிமாற்றத்தில் ஏற்படும் நட்டத்துக்கு நட்டஈடு வழங்கல்
6) முறையற்ற பங்குப்பரிமாற்றத்தை ரத்துச் செய்தல்.
7) விலை கூறப்பட்ட கம்பனிகளின் தவறான நடத்தையை பகிரங் கப்படுத்தல்.
8) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

## ஏற்றுமதி முயற்சிக்கான புதிய ஊக்குவிப்புக்கள்

1992 ஆம் ஆண்டு ஏற்றுமதி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் சிறிய ஏற்றுமதி உற்பத்தி, வியாபாரிகளுக்கு பல ஊக்குவிப்புக்கள் அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 10 மில்லியனுக்குக் குறைவான மூலதனத்தைக் கொண்ட சிறிய ஏற்றுமதி முயற்சியாளர்களுக்கு இவ் ஊக்குவிப்பு அறிவிக்கப்பட்டது. இதன்படி இலங்கை முதலீட்டுச்சபையின் கீழுள்ள முதலீட்டாளர்கள் அனுபவித்து வரும் அனைத்து நிதிசார்ந்த, நிதிசாராத ஊக்குவிப்புக்கள் யாவும் பின்வரும் சிறிய ஏற்றுமதி முயற்சியாளர்களுக்குப் பொருந்தும்.

1) சிறிய ஏற்றுமதி நோக்கிய உற்பத்தியாளர்.
2) சிறிய ஏற்றுமதி விற்பனை நிறுவனங்கள்.
3) வெளிநாட்டு முதலீட்டைக் கவரும் முகாமை ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள்.
4) ஏற்றுமதிக்கான கம்பியூட்டர்களை உற்பத்தியிடும் நிறுவனம்.

மேலே குறிப்பிட்ட 4 ஏற்றுமதித் தொழில் முயற்சியாளர்களுக்கு பின்வரும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றது.

1) 5 ஆண்டு வரி விடுமுறை, தொடர்ந்து 5 ஆண்டுக்கு பாதி வரிச் சலுகை.
2) இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள், இயந்திரம் போன்றவற்றுக்கு சுங்க வரிப் புரள்வு, வரி விலக்கு.
3) கடன் வசதி பெறும் உரிமை (அபிவிருத்தி வங்கிகளிடம்).
4) வெளிநாட்டு வங்கிக் கணக்கு பேணும் உரிமை.
5) வரியில்லாது மோட்டார் வாகனம் இறக்குமதி செய்யும் உரிமை.

## சுதந்திர வர்த்தக வலயம் *(Free or Trade Zone)*

வரி அறவீடு இன்றி OR ஓரளவு வரி அளவீட்டுடன் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்ய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் நிலப்பகுதியை சுதந்திர வர்த்தகவலயம் என அழைப்பார். ஆரம்பத்தில் 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ஆண்டு பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு தாபிக்கப்பட்டு இக்குழுவின் கீழ் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கொண்டு வரப்பட்டன. முதலில் 1978, கொழும்புக்கு வடக்கே கட்டுநாயக்காவில் சுமார் 160 சதுர மைல் பரப்பெல்லைக்குள் சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1982 இல் பியகமவிலும், 1981 இல் கொக்கலயிலும், 1993 இல் அனுராதபுரம் மிகிந்தலையிலும் அதனைத் தொடர்ந்து இறுதியாக 1994 இல் கண்டி பல்லேகலையிலும் சுதந்திர வர்த்தக வலயம் தாபிக்கப் பட்டது.

1992 இல் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் திருத்தப்பட்டதுடன், வெளிநாட்டு முதலீட்டு மதிவுரை ஆணைக்குழு பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவுடன் இணைக்கப்பட்டு ஒரு முகப் படுத்தப்பட்ட மத்திய நிலையம் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1992 நவம்பர் மாதம் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் பெயர் இலங்கை முதலீட்டுச் சபை என மாற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் சுதந்திரவர்த்தகவலயம் என பிரகடனப்படுத்தப்பட்டு நாட்டின் எல்லாப் பகுதியிலுமுள்ள வெளிநாட்டு முதலீடுகள் யாவும் இல ங்கை முதலீட்டுச்சபையின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

### சுதந்திர வர்த்தக வலயத்தின் குறிக்கோள்கள்

1) வேலை வாய்ப்பு வழங்குதல்
2) அன்னியச் செலாவணி உழைத்தல்
3) வெளிநாட்டு சந்தை வாய்ப்புப் பெற முடிதல்
4) நவீன தொழில் நுட்பங்களைப் பெறல்
5) வெளிநாட்டு மூலதனத்தைக் கவரல்

### வலய முதலீட்டாளருக்கான ஊக்குவிப்புக்களும் வசதிகளும்

01) **வரி விடுமுறை**

முதலாவது இலாப மீட்டும் வருடத்தின் அடிப்படையில் 5-15 வருடங்களுக்கு இடையிலான கூட்டு வருமானத்தின் மீதான 100% வரி விலக்கு.

02) **வரிச்சலுகை**

வரி விடுமுறை முடிந்த காலத்திலிருந்து தொடர்ந்து 15 வருடங்களுக்கு 2% தொடக்கம் 5% வரையிலான சலுகை வரிச்சலுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) **இரட்டை வரி விதிப்பு நிவாரண உடன்படிக்கை**
ஒரு முறைக்கு மேல் தீர்வை or வரி அறவிடப்படுவதைத் தவிர்ப்ப தற்காக மேற்கொள்ளும் உடன்படிக்கையே இதுவாகும். இது பொது வாக நாடுகளுக்கிடையில் நடைபெறும்.

04) **வெளிநாட்டு ஊழியத்தின் சம்பளத்துக்கு வரிவிலக்கு**
வரி விடுமுறைக்காலம் வரையும் வெளிநாட்டு ஊழியம் தாம் உழைக்கும் ஊழியத்துக்கு வரிவிலக்கு.

05) **தீர்வையற்ற ஏற்றுமதி, இறக்குமதிகள்**
இருபது வருட காலப்பகுதிக்கு 15 சதவீத முன்னுரிமை வரி விதிப்பு முறை வழங்கப்பட்டுள்ளது. இது வலயத்துக்குள்ளான ஏற்றுமதி இறக்குமதிக்கே பொருந்தும்

06) **மூலதனத்தை எடுத்துச் செல்வதில் கட்டுப்பாட்டில்லை**
கம்பனியைக் கலைக்கும் போது மூலதனத்தை விற்று வரவுகளை கட்டுப்பாடுகள் எதுவுமின்றி முதலீட்டாளரின் நாட்டுக்கு திரும்ப அனுப்பும் உரிமை.

07) **பங்கு முதலீட்டின் உச்ச வரம்பு நீக்கப்பட்டது**
வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு 40 சதவீதம் வரையும் முதலிட லாம் என்ற உச்சவரம்பு இல்லாது செய்யப்பட்டது

08) பங்குகளை இலங்கைக்குள்ளும், வெளியிலும் கட்டுப்பாடின்றி கைமாற்றல்

09) பங்குகளை கை மாற்றுவதற்கு வரி விதிக்கப்பட்டமை

10) பங்குகளுக்கான வருட பங்குலாபத்துக்கு வரி விதிக்கப்பட்டமை.

உட்கட்டமைப்பு வசதிகள் (அடிப்படை வசதிகள்) வருமாறு:

01) காணி கட்டிட வசதிகள்
02) உள்ளக பாதை வசதிகள்
03) நீர் வழங்கல் வசதிகள் (சர்வதேச தரத்தையுடைய நீர்)
04) சூழல் பாதுகாப்பு வசதி
05) மின்சார வழங்கல் வசதிகள்
06) தபால் தொலைத் தொடர்பு வசதி (செய்மதி இணைப்பும் உண்டு)
07) போக்குவரத்து வசதி
08) வலயத்தினுள் பாதுகாப்பு வசதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ+ம்) பாதுகாப்பு வெளிச்சம், கம்பிவேலி, ஆட்கள், வாகனங்களைப் பரிசோதித்தல்.

09) ஏனைய சேவை வசதிகள்
(உ+ம்) வங்கிக்காப்புறுதி வசதி, துறைமுகம் வைத்திய சேவை

10) ஆலோசனை தகவல் வசதிகள்.

## சுதந்திர வர்த்தக வலயத்தினால் ஏற்படும் பாதக (மோசமான) விளைவுகள்

1) தொழிலாளர் சுரண்டப்படுதல்
2) தேறிய ஏற்றுமதி வருவாய் மிகக்குறைவு
3) ஏற்றுமதிகளுக்கு இறக்குமதி நாட்டில் அனுமதிக்கட்டுப்பாட்டு (Quata) முறை
4) உழைப்பில் பெரும் பகுதி வெளிநாடு செல்லல்.
5) உள்நாட்டில் குழந்தை பருவக் கைத்தொழில் அழிக்கப்படும்.
6) வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்கும் ஊக்குவிப்புக்கள் உள்நாட்டவருக்கு கிடைக்காமையினால் ஊக்கமிழக்கப்படும்.
7) அரசு பல அசௌகரியங்களை எதிர் நோக்குதல்
(உ+ம்) வேலை நிறுத்தத்தில் தொழிலாளர் ஈடுபடல்.
வெளிநாட்டு முதலீட்டாளர் வெளியேறுவது என அச்சுறுத்தல் போன்றவை.

## சுதந்திர வர்த்தக வலயத்தினால் ஏற்படும் நன்மைகள்

1) வேலைவாய்ப்பு அதிகரித்தல்.
2) வெளி நாட்டுச் செலாவணி உழைத்தல்.
3) உயர் தொழில் நுட்பம்
4) வெளிநாட்டு மூலதனம்.
5) வெளிநாட்டுச் சந்தை விரிவாக்கம்.

## இலங்கை முதலீட்டுச் சபை *(B.O.I) (Board of Investment)*

1978 ஆம் ஆண்டு பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவுடன் வெளிநாட்டு மதியுரை ஆணைக்குழு இணைக்கப்பட்டு, ஒரு முகப்படுத்தப்பட்ட மத்திய நிலையமாக மாற்றி அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், இது இலங்கை முதலீட்டுச்சபை (BIO) என அழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டது. இச்சபையின் அதிகாரப்பரப்பும் அதிகரிக்கப்பட்டது. இச்சபை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்டு காணப்படுகின்றது. இதில் ஒருவர் பணிப்பாளர் சபையின் தலைவராக நியமிக்கப்படுவார்.

இச் சபையினால் வெளிநாட்டு முதலீட்டாளருக்குத் தேவையான விபரங்களை வழங்குவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளருக்கான வழிகாட்டி என்னும் கைநூல் வெளியிடப்பட்டதாகும். இது முதலீடுகளை ஆளுமைப்படுத்தும் விதிகளை உள்ளடக்கியிருக்கும். முன்னர் வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் மொத்தப்பங்கு மூலதனத்தில் 40% க்கு மேற்படாத தொகையினை முதலிடலாம் என்ற கட்டுப்பாடு காணப்பட்டது. பின்னர் பங்கு முதலீட்டிலுள்ள உச்சவரம்பு நீக்கப்பட்டு இலங்கையின் பொருளாதாரத்துக்கு வேண்டப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளாக இருந்ததால் 100 சதவீதம் வரை முதலிடலாம் என அனுமதிக்கப்பட்டது.

இச்சபையினால் பாரிய வெளிநாட்டு மூலதனத்தை உடைய கம்பனிகளைக் கவர்வதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கு உயர்வான மூலதனத்தை உடைய கம்பனிகளை பிளக்சிப் கம்பனி (Flagship Companies) என வகைப்படுத்தி ஊக்குவிப்புக்களையும் வசதிகளையும் வழங்கி வருகின்றது.

## இலங்கை முதலீட்டுச் சபையின் குறிக்கோள்கள்

01) இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல், பாதுகாப்பு வழங்கல்.
02) பொருளாதார அடித்தளத்தை பரவலாக்கலும் உறுதிப்படுத்தலும்.
03) வெளிநாட்டு முதலீட்டை இலங்கையில் ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்.
04) இலங்கையில் வர்த்தக,விவசாய, கைத்தொழில் முயற்சிகளை நிறுவ உதவுவதுடன் அதனை மேம்படுத்தல், ஊக்குவித்தல், பாதுகாத்தல்.
05) குறிப்பிட்ட பிரதேசங்களுக்குள் நடவடிக்கைகளை நிர்வகித்தல்.

## இலங்கை முதலீட்டுச் சபையின் தொழிற்பாடுகள்

01) முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை, தகவல் வழங்கல்.
02) முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.
03) முதலீட்டாளர்களுடன் அரசின் சார்பில் உடன்படிக்கைகளை ஏற்படுத்தல்.
04) முதலீட்டாளர்களுக்கு வரிவிடுமுறை, வரிச்சலுகை போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) தொழிலாளர்களை மலிவு விலையில் பெற்றுக் கொடுத்தல்
06) முதலீட்டாளர்களை அங்கீகரித்து அனுமதிப்பத்திரம் வழங்கல்
07) வலயத்துள் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தல்
08) வலயத்துள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்
09) வலயத்துள் ஏற்படும் தொழிற் பிணக்குகளைத் தீர்க்க உதவுதல்.

## கைத்தொழிற் பேட்டை *(Industrial Estate)*

தனியார் துறையிலுள்ள சிறிய நடுத்தர கைத்தொழிலாளர்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, வழங்குவதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரதேசம் கைத்தொழிற்பேட்டை ஆகும். இலங்கையின் கைத் தொழில் மயமாக்கல் என்ற வழிமுறையின் அடிப்படையில் 1950 ஆம் ஆண்டிலிருந்து கைத்தொழிற் பேட்டைகள் அறிமுகமாகி செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கையில் இதனைக் கைத் தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் கைத் தொழில் அபிவிருத்தி சபையே நிர்வகித்து வருகின்றது. இலங்கையில் மிகவும் வெற்றிகரமாக தொழிற்படும் கைத் தொழிற் பேட்டை எக்கல கைத்தொழிற்பேட்டை ஆகும். இக்காலப்பகுதியில் பூசா, அச்சுவேலி, பாணந்துறை, பல்ளேகல போன்ற பகுதிகளிலும் கைத் தொழிற்பேட்டை செயற்பட்டு வந்தது.

### கைத்தொழிற் பேட்டை ஆரம்பிப்பதன் குறிக்கோள்

01) சிறிய, நடுத்தரக் கைத்தொழில்களை ஊக்கப்படுத்தல்.
02) சிறிய, நடுத்தரக் கைத்தொழிலாளரிடையே தொடர்பை அதிகரித்தல்.
03) சிறிய, நடுத்தரக் கைத்தொழிலாளர்களுக்கு இலவச உள்ளமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
04) இக் கைத்தொழிலாளர்களுக்கு மூலப் பொருள், தொழிநுட்ப வசதிகளை இலகுவாகக் கிடைக்கச் செய்தல்.
05) இக் கைத்தொழிலாளர்களின் முடிவுப்பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல்.

### கைத் தொழிற் பேட்டைகளில் உள்ள கைத் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வசதிகள்

01) செப்பனிடப்பட்ட காணித்துண்டுகள்.
02) தயாரிக்கப்பட்ட கட்டிட வசதி.
03) போக்குவரத்து, பாதை வசதிகள்.
04) மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி.
05) தொடர்பாடல் வசதிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06) மின்சார வசதிகள்.
07) நீர் வசதிகள்.
08) கழிவகற்றும் வசதிகள்.
09) முடிவுப் பொருட்களுக்குச் சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல்.
10) பேட்டையைச் சுற்றி பாதுகாப்பு வசதி.

## கைத்தொழிற் பேட்டைகளில் உள்ள கைத்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சனை

01) விரிவு படுத்தலுக்கு வாய்ப்புக் குறைவாக இருத்தல்.
02) ஒரு தொழிற்சாலையில் ஏற்படும் வேலை நிறுத்தம் மற்றைய தொழிற் சாலையிலும் இலகுவில் பரவி விடும்.
03) பேட்டையுள் பாதைகளில் போக்குவரத்த நெருக்கடி
04) சூழல் மாசுபடல் அதிகம்.
05) பொது வசதிகள் குறைவாக இருத்தல்.

## தீர்வையற்ற கடை (*Duty Free Shop*)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களை தீர்வை அறவீடுகள் எதுவுமின்றி கொள்வனவு செய்யக்கூடிய கடையினை இது கருதும். விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைகளை சுங்கத்தி ணைக்களமும், விமான நிலைய விமானச் சேவைக்கம்பனியும் மேற் பார்வை செய்து நிர்வகித்து வருகின்றது. அத்துடன் இக்கடையின் முகாமையை மேற் கொள்ள சிலோன் சிப்பிங் லைன்ஸ் கம்பனி பொறுப்பாகவுள்ளது. இக் கடையில் பயணிகள் காசோலையினைப் பயன்படுத்தி பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியும். இக்கடையில் பின்வரும் பிரிவினர் பொருட் களைக் கொள்வனவு செய்யக் கூடியதாகவிருக்கும்.

01) சுற்றுலாப் பயணிகள்.
02) இராஜதந்திரிகள்
03) வதிவு விசாவினை உடைய வெளிநாட்டவர்கள்
04) செலாவணி உழைக்கும் இலங்கையர்.
05) வெளிநாடுகளில் வாழும் இலங்கை வம்சாவழியினர்.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் இலங்கையர் வெளிநாடுகளில் தங்கியகாலத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வையற்ற கடையில் கொள்வனவு செய்யப்படும் பொருளின் அளவு தீர்மானிக்கப்படும். இத்தகைய தீர்வைத் தள்ளுபடி பின்வரும் அடிப்ப டையில் நிர்ணயிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) வெளிநாடுகளில் தங்கிய காலம் 90 நாட்களுக்குக் குறைவாக இருப்பின் 7500 ரூபா பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

02) வெளிநாடுகளில் தங்கிய காலம் 90 நாட்களுக்கு மேலும் 365 நாட்களுக்கு குறைவாகவும் இருப்பின் 25,000 ரூபா பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

03) வெளிநாடுகளில் தங்கிய காலம் 365 நாட்களுக்கு உயர்வாக இருப்பின் 50,000 ரூபா பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

18 வயதுக்கு மேற்படாத பராயமடையாதவராக இருப்பின் பின்வரும் அடிப்படையில் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

01) வெளிநாடுகளில் தங்கிய காலம் 90 நாட்களுக்குக் குறைவாக இருப்பின் 5,000 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

02) வெளிநாடுகளில் தங்கிய காலம் 90 நாட்களுக்கு மேல் காணப்படின் 7,500 ரூபா பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

### தீர்வையற்ற கடையினால் கிடைக்கும் பயன்பாடுகள்

1) செலாவணி வெளியேற்றத்தைத் தவிர்த்து எமது நாடு செலாவணி பெறல்.

2) மலிவான விலையில் விரும்பிய பொருட்களை வாங்க முடிதல்.

## பொருளாதார ஒன்றியம் / சமாசம்
## *(Economic Union)*

இதன் கீழ் அங்கத்தவ நாடுகள் பொதுவான பணக்கொள்கை வரிக்கொள்கை (பிசுக்கால்) நலத்துறைக் கொள்கை போன்றவற்றுடன் வர்த்தகம் உற்பத்திக் காரணிகளின் புலப்பெயர்ச்சி போன்றவை தொடர்பாகவும் ஒருமைப்பாட்டைக் கொண்டிருத்தல்.

### சுங்கச் சமாசம் *(Customs Union)*

அயல் நாடுகள் தமக்கிடையே உள்ள எல்லாவகையான வர்த்தகத் தடைகளையும் நீக்கி, தமக்கிடையே சுதந்திரம் கூடிய ஓர் வெளி நாட்டு வர்த்தகக் கொள்கையைப் பேணுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும். இங்கு உறுப்பு நாடுகளுக்கிடையே ஓர் கட்டில்லாத ஏற்றுமதி இறக்குமதி முறையினை அவதானிக்கலாம்.

சுங்கச்சமாச உறுப்பு நாடுகளுக்கிடையே செலாவணிக்கொள்கை, வரிக்கொள்கை போன்றவை ஒத்தவியல்பினைக் கொண்டிருக்கும். அத்துடன் உறுப்புநாடு தவிர்ந்த வெளிநாடுகளுடன் தொடர்புகளை மேற்கொள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும்போது உறுப்பு நாடுகள் ஒரேவிதமான வர்த்தகக் கொள்கையைப் பின்பற்றுதல்.

(உ+ம்) 01) ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்.
02) மத்திய ஆபிரிக்க சுங்கப் பொருளாதாரச் சங்கம்.
03) மத்திய அமெரிக்க பொதுச்சந்தை.
04) கர்பியன் சுதந்திர வர்த்தகப்பிரதேசம்.

***சுங்கச் சமாசத்தின் அவசியம் அல்லது நோக்கம்***

01) பிராந்திய சுதந்திர வர்த்தகத்தை அபிவிருத்தி செய்தல்.
02) பிராந்திய நாடுகளுக்கிடையே நல்ல உறவினைப் பேணுதல்.
03) பிராந்திய பலத்தை அதிகரித்தல்.
04) உறுப்பு நாடுகளுக்கிடையே தொழிலாளர், மூலவளம், சந்தை பரிமாற்றம் தொடர்பாக கூட்டு ஒத்துழைப்பை ஏற்படுத்தல்.
05) பொருளாதார அபிவிருத்தி.

சுங்கச் சமாசத்தின் உறுப்புரிமையினைக் கொண்டுள்ள நாடுகளின் சர்வதேச வர்த்தகத்தை 2 பிரிவாக அவதானிக்கலாம்:-

01) வியாபார ஆக்கம்
02) வியாபார திசை திருப்பம்

வியாபார ஆக்கம் என்றால், சுங்க சமாசத்தில் உறுப்புரிமையினை உடைய நாடு ஒன்று தான் உற்பத்தி செய்யும் பொருளை இன்னொரு நாடு அதை விட மலிவாக உற்பத்தி செய்யுமாயின், முன்னைய நாடு தனது பொருளுக்காக பின்னைய நாட்டின் பொருளைப் பதிலீடு செய்யும்.

வியாபார திசை திருப்பம் என்றால் சுங்க சமாசத்தில் உறுப்புரிமையினை உடைய நாட்டில் உற்பத்திச் செலவுடன் ஒப்பிடும் இடத்தில் வெளியாரின் பொருள் குறைந்த உற்பத்தி செலவினைக் கொண்டு இருப்பினும், வெளிநாடுகளின் பொருளை வாங்காது விலை கூடிய அங்கத்துவ நாட்டின் பொருளையே கொள்வனவு செய்யும்.

## பொதுச் சந்தை

அங்கத்தவ நாடுகளிடையே தீர்வைகளற்ற ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுடன் உற்பத்திக் காரணிகளையும் அங்கத்துவ நாடுகளிடையே சுதந்திரமாக பரிமாறிக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுப்பு *(Tariff)*

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எல்லா நாட்டுப் பொருட்களுக்கும், எல்லாம் இனப் பொருட்களுக்கும் வேறுபாடு எதுவும் இன்றி ஒரே வீத வரி அறவிடப்படுமே ஆயின் அதனையே இருப்பு கருதும்.

### வரி வதிப்பு முறையில் இறுப்பு கடைப்பிடிப்பதற்கான காரணங்கள்

01) வருமானம்
02) கைத்தொழில் பாதுகாப்பு
03) தொழில் மட்டத்தைப் பாதுகாத்தல்
04) இறக்குமதி ஏற்றுமதி பொருளின் விலையைச் சமப்படுத்தல்

## முன்னுரிமை இறுப்பு

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எல்லா நாட்டு பொருட்களுக்கும், எல்லா இனப் பொருட்களுக்கும் ஒரே வீத வரி அறவிடப் படாது வெவ்வேறுபட்ட வித்தியாசமான வரி விகிதம் அறவிடப்படுவதனை இது கருதும். சில பொருட்களின் அல்லது நாடுகளுடனான வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காக சலுகை விகிதங்களும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

### முன்னுரிமை இறுப்பு கடைப்பிடிக்கப்படுவதற்கான காரணம் வருமாறு

01) சில நாடுகளுக்கிடையேயான வியாபாரத்தை ஊக்குவித்தல்
02) சில இனப் பொருட்களுக்கிடையேயான வியாபாரத்தை ஊக்குவித்தல்

## ஏற்றுமதிக் கடன் வழங்கும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
## *(Sri Lanka Export Credit Insurance Corporation)*

ஏற்றுமதியாளர்களுக்கு நிதி வசதிகளையும், காப்புறுதி வசதிகளையும் வழங்குவதற்காக 1979 ஆம் ஆண்டு இவ் அமைப்பு உருவாக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு ஏற்றுமதி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் 1992 ஆம் ஆண்டு தொடக்கம் இக்கூட்டுத் தாபனத்தின் அபாயக்காப்புறுதி திட்டம், கடன் உத்தரவாதத் திட்டம் போன்றவை சிறு ஏற்றுமதியாளர்களுக் கும் பொருந்தும் என அறிவித்துள்ளது.

1) **ஏற்றுமதி கொடுப்பனவுக்கான காப்புறுதிப்பத்திரம்**
*(Export Payment Insurance)*

இறக்குமதியாளரிடம் இருந்து பணத்தை அறவிடும் வேளையில் ஏதாவது அபாயம் அல்லது இடர் ஏற்படுமே ஆயின், அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து ஏற்றுமதியாளனைப் பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்திய அபாயக்காப்புறுதி திட்டமே இதுவாகும். கொடுப்பனவுசெய்யப்ப டாத தொகையில் 90% நட்டஈடு வழங்கப்படும். ஆகக்கூடிய நட்டஈடு 1 மில்லியன் ரூபா ஆகும். இதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

01) பணத்தை அறவிட முடியாத நிலையில் நட்ட ஈடு கிடைக்கும்.

02) தாமதம் ஏற்படும் போது நட்டஈடு கோரல்.

03) இப் பத்திரத்தை பிணையாக வைத்து கடன் வசதி பெறல்.

04) ஏனைய ஆலோசனை வசதிகளைப் பெறல்.

2) **கடன் உத்தரவாதத்திட்டம்**

ஏற்றுமதியாளர்களுக்கு வணிக வங்கிகள், நிதிக்கம்பனிகள் போன்ற நிதி நிறுவனங்கள் வழங்கும் கடன் தொகைக்கு ஏற்றுமதியாளரின் சார்பில் அளிக்கப்படும் கொடுகடன் உத்தரவாதத்தினை இது கருதும். இது மூன்று வகைப்படும்.

(2.1) ***கப்பலுக்கு முந்திய கடன் உத்தரவாதத்திட்டம்***

ஏற்றுமதி நோக்கத்திற்காக பொருளைத் தயாரிப்பதற்குத் தேவையான கடனைப் பெறும் வேளையில் அளிக்கப்படும் உத்தரவாதம் ஆகும். கடன் தொகை திரும்பச் செலுத்தப்படாத வேளையில் 75 வீதத்தை வர்த்தக வங்கிகளுக்கு கூட்டுத்தாபனம் வழங்குகின்றது.

**கப்பலுக்கு முந்திய கடன் பின்வரும் தேவைகளுக்கு பயன்படும்**

01) மூலப்பொருளைக் கொள்வனவு செய்தல்

02) இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்

03) பொருளை ஆக்குவதற்கான கூலி

04) கப்பற் கட்டணம்

05) காப்புறுதிக் கட்டணம்

06) தீர்வை செலுத்துவதற்கு

(2.2) ***கப்பலுக்கு பிந்திய கடன் உத்தரவாதத் திட்டம்***

இறக்குமதியாளனால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவண உண்டியலை கழிவு நீக்கம் செய்யும் போது அளிக்கப்படும் உத்தரவாதத்தை இது குறித்து நிற்கும். உண்டியல் தொகையில் 85 சதவீதம் வர்த்தக வங்கிக்கு காப்புறுதியாக வழங்கப்படும். ஆகக்கூடிய தொகை 10 இலட்சம் ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (2.3) ஏற்றுமதி செயற்பாட்டு உத்தரவாதத்திட்டம்

ஏற்றுமதி நடவடிக்கைகளின் செயற்பாட்டை உத்தரவாதப்படுத்தி வழங்கப்படும் உத்தரவாதத்தினை இது கருதும் இறக்குமதியாளரிடம் இருந்து முற்பணம் பெறுவதற்கு வசதியாகவே உத்தரவாதம் உதவு கின்றது.

## கண்டவுடன் கொடுப்பனவு செய்யும் கட்டளை

1990 ஆம் ஆண்டு இலங்கை வங்கியினால் இக்கட்டளை அறிமுகப்ப டுத்தப்பட்டதாகும். நகரங்களுக்கிடையே கொள்வனவாளர்கள் தாங்களா கவோ பெயர் குறிப்பிட்ட பெறுருக்னகோ நிதிகளை மாற்றல் செய்யும் நோக்கத்திற்காக இக்கட்டளையை தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப் படுத்தியது இதனை புறக் குறிப்பிட்டு கைமாற்றமுடியாது.

## சீபேங் பயண முகவர் *(Cey Bank Travel Centre)*

மிகச் சிறப்பான பயண வசதிகளை சிறப்பாக வெளி நாட்டவர்களுக்கு வழங்கும் பொருட்டு AIR LANKA நிறுவனத்தினாலும், இலங்கை வங்கி யினாலும் மூலதனம் இடப்பட்டு 1990ஆம் ஆண்டு Cey Bank Travel Centre உருவாக்கப்பட்டதாகும் அதன் பிரதான தொழிற்பாடுகள்

01) பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
02) பயணச்சீட்டு வழங்கல்.
03) விமான நிலையத்துக்கு போக்குவரத்து சேவையை வழங்கல்.
04) விமான ஆசனங்களைப் பதிவு செய்து கொடுத்தல்.
05) தங்கும் அறை வசதிகளைப் பெற உதவுதல்.
06) பொதிகளைக் காப்புறுதி செய்தல்.

## 1991 தேசிய ஏற்றுமதிக் கொள்கை

இலங்கையின் தேசிய ஏற்றுமதிக் கொள்கையினை திட்டமிடுவதற்கு பொறுப்பான அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்தி கழகத்தினால் 1991 ஆண்டு மார்ச் மாதம் புதிய தேசிய ஏற்றுமதிக் கொள்கை ஒன்று வடிவமைக் கப்பட்டது. இக் கொள்கையின் பிரதான உள்ளடக்கங்கள் வருமாறு:

01) ஏற்றுமதியாளர் போட்டியில் வெற்றியடைய செலாவணி வீதத்தை நியாயமான மட்டத்தில் பேணல்
02) ஏற்றுமதியாளர் மேலும் போதியளவு இறக்குமதி உள்ளீடுகளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) ஏற்றுமதிப் பொருட்களுக்குப் போட்டியிடும் நாடுகளில் போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்குச் சமமான ஊக்குவிப்புக்களை வழங்கல்

04) ஏற்றுமதிக்கான உரிமம் வழங்கல் முறையில் தளர்வு

05) அரசின் ஏனைய ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை குறைந்தமட்டத்தில் பேணல்

06) பொதுப்பயன்பாட்டு கருவி, சேவையில் சகல ஏற்றுமதியாளர்களுக்கும் முன்னுரிமை.

07) சகல முதலீட்டாளர்களுக்கும் நிதி வசதிக்கான வழிகள் மேம்படுத்தப்படும்.

## 1992 - 2001 ஆண்டுவரை ஏற்றுமதி தசாப்தம்.

ஏற்றுமதி முயற்சியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1992 ஆண்டினை ஏற்றுமதி ஆண்டாகவும், 1992 - 2001 காலப்பகுதியினை ஏற்றுமதி தசாப்தமாகவும் அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. இத்தகைய தசாப்தத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், இதற்கான கொள்கைகளை விருத்தி செய்வதற்காகவும் தேசிய வழிநடத்தற்குழு உருவாக்கப்பட்டது. இதில் பின்வரும் உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

01) பிரதம மந்திரி
02) வர்த்தக வாணிப துறை அமைச்சர்
03) மாகாண முதலமைச்சர்கள்

### தேசிய வழி நடத்தல் குழு அல்லது ஏற்றுமதி தசாப்தப் பிரகடனத்தின் குறிக்கோள்கள்

01) ஏற்றுமதி அபிவிருத்திக்கான உள்வாய்ப்புகளை வெளிப்படுத்தும் பொருளாதாரத் துறையினை இனங்காணல்.

02) இத்தகைய பொருளாதாரத் துறையின் உள்ளார்ந்த வளத்தினைக் கண்டுபிடிப்பதற்கான உபாயத்தை தீர்மானித்தல்

03) ஏற்றுமதி உற்பத்திகளுக்கான வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பை இனங்காணல்

04) ஏற்றுமதி துறைக்கான தடைகளை இனங்காணலும், நிவர்த்தி செய்தலும்

05) கொள்கையின் ஒருங்கிணைப்புக்கும், நிறைவேற்றலுக்கும் பொருத்தமான செயல்முறையினை வகுத்தல்.

06) இறக்குமதி உள்ளீடுகளுக்கான தீர்வைச் சலுகை, பொதியிடல் அபிவிருத்தி, உற்பத்தியின் தொழில் நுட்பம் போன்ற ஏற்றுமதி ஊக்கப்படுத்தலுக்கான பக்க பலத் தேவைகளையும் தீர்மானித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எக்ஸ்போ -92/94 (சர்வதேச வியாபாரக் கண்காட்சி)

ஏற்றுமதி வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1992 நவம்பரில் இலங்கையில் முதலாவது சர்வதேச வியாபாரக் கண்காட்சி எக்ஸ்போ -92 நடைபெற்றது. இது இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை உலக அரங்கில் அறிமுகப்படுத்துவதற்கு ஒரு முக்கிய சந்தர்ப்பத்தை வழங்கியது. இலங்கையில் மரபு ரீதியான, மரபு ரீதியற்ற 23 வகைப் பொருட்களையும், சேவைகளையும் காட்சிக்கு வைத்திருந்ததுடன், 340 விற்பனை கூடங்களும் நிறுவப்பட்டது. இத்தகைய கண்காட்சியினால் 46 நாடுகளிலிருந்து 3600 வெளிநாட்டு இறக்குமதியாளர்களையும், முதலீட்டாளர்களையும் கவர்ந்து கொண்டது.

''எக்ஸ்போ 92'' உடன் ஒன்றுபடும் விதத்தில் இலங்கை முதலீட்டுச் சபையினால் வெளிநாட்டு முதலீடுகளைக் கவரக் கூடிய வகையில் கருத்தரங் கொன்றும் 92 இல் ஏற்பாட்டுக் குழுவினால் ஒழுங்குபடுத்தி நடாத்தப்பட்டது. இத்தகைய கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகளில் இருந்து வந்த கொள்வனவாளர்களிடம் இருந்து உணவு, உண்டிகள், தங்குமறை, விமானப் போக்குவரத்து போன்றவற்றின் சேவைக்கு கட்டணமாக அதிகளவு நேரடி வருமானமும் உழைக்கப்பட்டது.

### எக்ஸ்போ -92 இதனால் கிடைத்த அனுகூலம்

01) ஏற்றுமதியாளர் தமது பொருள் பற்றிய தகவல்களை வெளியிடக் கூடியதாக இருந்தமை
02) ஏற்றுமதிப் பொருட்களுக்கு வெளிநாட்டு இறக்குமதியாளரிடம் இருந்து நேரடியாக அதிகளவு கட்டளைகளைப் பெறக்கூடியதாக இருந்தமை
03) வெளிநாட்டு இறக்குமதியாளர் தாம் இறக்குமதி செய்யத் தயாராகவுள்ள பொருளின் தகவல்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்
04) நேருக்கு நேர் சந்திப்பதால் அறிமுகம் அதிகரிக்கும்.

### எக்ஸ்போ - 94

ஒக்டோபரில் நடாத்தப்பட்ட இலங்கையின் இரண்டாவது பன்னாட்டு வர்த்தக் கண் காட்சியான எக்ஸ்போ - 94 இலங்கையின் ஏற்றுமதியை 350இற்கு மேற்பட்ட கண்காட்சிக்காரர் பங்குபற்றுவதற்கு வசதியளித்ததுடன், 42 நாடுகளிலிருந்து ஏறத்தாழ 1,732 வெளிநாட்டு கொள்வனவாளர்களையும், முதலீட்டாளர்களையும் கவர்ந்தது. இக்கண்காட்சியின் மூலம் ஏறத்தாழ ரூ.1,420 இலட்சம் பெறுமதி கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளைப் பெறக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1990 ஆம் ஆண்டு புதிய கைத்தொழில் கொள்கை
*(New Industrial Policy)*

1990ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் புதிய கைத்தொழிற் கொள்கை ஒன்று ஆக்கப்பட்டது. இக் கொள்கையின் பிரதான குறிக்கோள் வருமாறு.

01) உள்நாட்டு சந்தைசார் கைத்தொழிலை ஏற்றுமதிசார் கைத்தொழிலாக மாற்றுதல்
02) உயர்ந்தளவு வேலைவாய்ப்பு வழங்கல்
03) சென்மதி நிலுவையை உறுதிப்படுத்தல்
04) மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்

பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்ட பேரண்டப் பொருளாதார மற்றும் துறைவாரியான கொள்கையின் நடைமுறைப்படுத்தலையும் இந்த உபாயம் உள்ளடக்கியுள்ளது.

01) பொருளாதாரத்தை உறுதி செய்தல்
02) உள்நாட்டு சேமிப்பை மேம்படுத்தல்
03) ஊக்குவிப்பு அமைப்பு முறையை மேம்படுத்தல்
04) வெளிநாட்டு முதலீட்டைக் கவரல்
05) ஆராய்ச்சியினையும், அபிவிருத்தியினையும் ஊக்குவித்தல்
06) நிருவாக கட்டுப்பாடுகளை நீக்கல்

## கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழு

1990ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கைத்தொழில் மேம்படுத்தல் சட்டத்தின் ஊடாக புதிய கைத்தொழில் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக, கைத்தொழில் மயப்படுத்தும் ஆணைக்குழு உருவாக்கப்பட்ட இவ் அமைப்பானது, நிதி அமைச்சர் கொள்கைத் திட்டமிடல், அமைச்சர், கைத்தொழில் அமைச்சர், சுற்றுலா கிராமிய கைத்தொழில் அமைச்சர், கைத்தறிபுடவைக் கைத்தொழில் அமைச்சர் ஆகியோரின் செயலாளர்களை உறுப்பினராகக் கொண்டு காணப்படுகின்றது. அத்துடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட 7 உறுப்பினர்களையும் உள்ளடக்கி கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

### இவ் ஆணைக்குழுவின் பிரதான தொழிற்பாடுகள்

01) கைத்தொழில் கொள்கை திட்டமிடல் தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகளை வழங்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) கைத்தொழிலாளர்களுக்கு உற்பத்தி பொருள் சந்தை பற்றிய தகவல்களை வழங்கல்.
03) கைத்தொழில் மயப்படுத்தலுக்கும், கைத்தொழில் மேம்பாட்டிற்குமான முகவராண்மைகளுக்கிடையே தொடர்பை உறுதி செய்தல்.
04) கைத்தொழில் மயப்படுத்தலுக்கான நிறுவன செய்முறையை உறுதி செய்தல்.
05) கைத்தொழிலுக்கான சேவை வழங்கும் திட்டத்தைத் தயாரித்தல்.
06) விசாரனை நடாத்தி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

## 200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டம்

இலங்கை கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் வழி காட்டுதலுக்கு அமைய இலங்கை முதலீட்டுச் சபையினால் இது அமுல் செய்யப்படுகிறது. 1992 ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் மாகாணங்களில் கிராமப்பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் முதல் தடவையாக கிராமப் பகுதிகளே தொழிற்துறை அபிவிருத்தியின் பலன்களைப் பெறுகின்றனர். இத்தொழிற்சாலைகளை அமைக்கும் அங்கீகாரம் தனியார் துறையினருக்கே வழங்கப்பட்டுள்ளது.

### இத்திட்டத்திற்கு அரசினால் வழங்கப்படும் ஊக்குவிப்பு

01) விசேட ஏற்றுமதிப் பங்கீட்டு ஒதுக்குகளை வழங்கியமை
02) மலிவு வீதங்களில் அரச காணிகளை வாடகைக்கு விடல்
03) மூலப் பொருள், இயந்திரம் இறக்குமதிக்கு தீர்வைத் தள்ளுபடி
04) வரிச் சலுகை

### இத்திட்டத்தினால் பொருளாதாரத்துக்கு கிடைக்கும் நன்மைகள்

01) அதிகரித்த அன்னியச் செலவாணி
02) கிராம இளைஞர்களுக்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு கிடைக்கும்
03) ஏற்றுமதிச் சந்தைப் பரப்பு அதிகரிக்கும்
04) கிராமப்பகுதியில் இருந்து நகரப்பகுதிக்கு குடிபெயர்வதைத் தடுத்தல்
05) நகரப்பகுதியில் சனப்பெருக்கம் அடைவதைத் தடுத்தல்
06) வறிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்
7) நகரப்பகுதியில் சூழல் மாசுபடுவதை தடுத்தல்

### இத்திட்டத்தினால் தொழிலாளருக்குக் கிடைக்கும் நன்மைகள்

01) ஆகக்குறைந்த மாதச் சம்பளம் 2,000 ரூபாவாக வரையறுக்கப்பட்டு இருத்தல்
02) தேர்ச்சித் திறனின் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) தேசிய தரம் சர்வதேச தரம் பற்றிய அறிவூட்டம்
04) காலை உணவு, தேநீர் மருத்துவ வசதி
05) சொந்த வீட்டிற்கு அருகில் வேலை செய்யும் வசதி
06) வேலை செய்வது பற்றிய நடைமுறையை விருத்தி செய்தல்

## ஏற்றுமதி வர்த்தக நிலையம்
## *(Export Trade Centre)*

1992ஆம் ஆண்டு உலக வர்த்தக நிலையம் என்ற பெயருடன் ஆரம் பிக்கப்பட்ட இவ் அமைப்பு 1994ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்றுமதி வர்த்தக நிலையம் என பெயர் மாற்றப்பட்டது. ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கை களை மேம்படுத்துவதற்காக கொழும்பு நகரத்தின் மத்தியில் உலக வர்த்தக நிலையம் உருவாக்கப்பட்டது. இலங்கை ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் கொள்ளவனவாளர்களுக்கான நிரந்தர காட்சிக் கூடமாகவும் தகவல் வழங்கும் நிலையமாகவும் செயற்பட்டு வருகின்றது. இந் நிலையத்தின் ஒரு பகுதி இலங்கை ஏற்றுமதி பொருட்களை விளம்பரப்படுத்தக் கூடிய நிரந்தர கண்காட்சி அறைகளாகவும், மற்றைய பகுதி ஏற்றுமதி தொடர்பான கருத்தரங்குகள் நடாத்தக்கூடிய நவீன வசதிகளைக் கொண்ட மகாநாடு மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. அத்து டன் ஏற்றுமதி ஆலோசனைப் பணிமனை, தேசிய பொதி செய்தல் நிலையம் போன்ற ஏற்றுமதிக்கு சேவை வழங்கும் அமைப்புகளும் செயற்பட்டு வருகின்றது.

### ஏற்றுமதி வர்த்தக நிலையத்தின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு

01) ஏற்றுமதி பொருள் பற்றிய பிறநாட்டு கொள்வனவாளர்களுக்கு தகவல்கள் வழங்கி பிரபல்யப்படுத்தல்.
02) ஏற்றுமதி பொருட்களுக்கு நிரந்தர காட்சி அறையாக இயங்குதல்.
03) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தகவல் வழங்கல்.
04) வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு தொடர்பாடல் வசதி வழங்கல்
05) ஏற்றுமதியாளர்களுக்கும் வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கும் இடையில் சந்திப்பை ஏற்படுத்தல்.
06) பொருத்தமான கொடுப்பனவு கருவி, போக்குவரத்து சாதனங்கள் பொதியிடல் போன்றவற்றை அறிமுகப்படுத்தல்.
07) வெளிநாட்டு வியாபார அபிவிருத்தி கருதி வர்த்தக மாநாடுகளை நடத் துதல்.
08) பிறநாட்டு வர்த்தக கண்காட்சியில் கலந்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை
## *(National Gem & Jewellery Authurity)*

1971ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அரச இரத்தினக்கல் கூட்டுத் தாபனச் சட்ட த்தை நீக்கம் செய்து 1993 ஆம் ஆண்டு 50 இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின்படி இரத்தினக் கல்கூட்டுத்தாபனம் தேசிய இரத்தினக் கல் ஆபரண அதிகாரசபை எனப் பெயர்மாற்றப்பட்டதாகும். நிதி அமைச்சரின் செயலாளர், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, மத்திய வங்கி, இரத்தினக்கல் வியாபார வங்கி, சுங்கத் திணைக்களம் கைத்தொழில் அமைச்சர், அமைச்சரால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர் ஆகிய அங்கத்தவர்களை கொண்ட நிர்வாக சபை இவ் அதிகாரசபையை கட்டுப்ப டுத்துகின்றது.

### இதன் பிரதான தொழிற்பாடுகள்

01) இரத்தினக்கல் ஆபரண கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.
02) இரத்தினக்கல், ஆபரண கைத்தொழிலின் வெளிநாட்டு சந்தை வாய்ப்பை அதிகரித்தல்.
03) சட்டமுறையின்றி இரத்தினக்கல் அகழ்தலை கட்டுப்படுத்தல்.
04) சட்டமுறையின்றி இரத்தினக்கல் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தல்.
05) இக்கைத்தொழிலாளர்களுக்கு ஆலோசனை, தகவல்களை அளித்தல்.
06) இரத்தினக்கல் ஆபரண கைத்தொழிலாளர்களுக்கு உள்ளமைப்பு, தொழிநுட்ப வசதியளித்தல்.

## இரத்தினக்கல் வியாபார வங்கி
## *(Gem Trading Bank)*

1983ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க இரத்தினக்கல் வியாபார வங்கிச் சட்டத்தின்படி இரத்தினக்கல், ஆபரணக் கைத்தொழில்களுக்கு கடன் வசதி கிடைப்பதை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

01) இரத்தினக்கல் கைத்தொழில்களுக்கு கடன் வழங்கல்.
02) இரத்தினக்கல் கைத்தொழலாளரிடமிருந்து வைப்பை ஏற்றல்.
03) இரத்தினக்கல் மற்றும் அரும் உலோகங்களை வாங்கல் விற்றல்.
04) இக் கைத்தொழிலாளர் சார்பாக உத்தரவாதமளித்தல்.
05) இக் கைத்தொழிலாளர்களின் உண்டியல்களை ஏற்றல், கழிவு நீக்கம் செய்தல்.

இவ்வங்கியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் 100 ரூபா ஆன 20 மில்லியன் பங்குகளை உடைய 2000 மில்லியன் பங்கு மூலதனமாகும். இதில் 500 மில்லியின் பங்கு மூலதனம் வழங்கிய மூலதனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் மத்தியவங்கி 50%ஐயும், நிதிநிறுவனம் 30%ஐயும், கூட்டுத்தாபனம் 20%ஐயும் எதிர் காலத்தில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டது.

## 1988 ஆண்டு 30 இலக்க வங்கித் தொழில் சட்டம்

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட வணிக வங்கிகளுக்கும், புதிதாக ஆரம் பிக்கப்படும் வணிக வங்கிகளுக்கும் சட்டரீதியாக ஆரம்பிப்பதற்கான உரிமத்தை வழங்கும் நோக்குடன் இச்சட்டம் உருவாக்கப்பட்டதாகும். இச்சட்டத்தின்படி புதிதாக உருவாக்கப்படுகின்ற வணிக வங்கிகள் மத்திய வங்கியின் நாணய சபையிடம் அங்கீகாரத்தை பெற்று உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வணிக வங்கிகளை ***உரிமம் பெற்ற வணிக வங்கிகள்*** எனவும் அழைக்கப்படும். இச்சட்டத்தின்படி உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மாத்திரமே வங்கித் தொழில், வங்கி, வங்கியாளர் என்ற சொற்பதங்களைப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் வங்கித் தொழில் சட்டத்தின்படி வங்கித் தொழில் கம்பனிகளை ஆரம்பிக்கும்போது பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றது.

01) 1982ஆம் ஆண்டு கம்பனிச்சட்டத்தின்படி பொதுக் கம்பனியாக பதியப்பட்டு இருத்தல் வேண்டும்.
02) தொழிலுக்கான அனுமதிப்பத்திரத்தை மத்திய வங்கியின் நாணய சபையிடம் பெற வேண்டும்.
03) ஆரம்பிக்கும் போது ஆகக்குறைந்தது 25 மில்லியன் ரூபா மூலதன த்தைக் கொண்டு இருக்க வேண்டும்.

இவ்வாறு உத்தரவுச் சீட்டுப் பெற்ற வணிக வங்கிகள் இச்சட்டத் தின்படி பின்வரும் நடவடிக்கைகளுக்கு மத்திய வங்கியிடம் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

01) தனிநபர் ஒருவர் வங்கியின் பங்கு மூலதனத்தில் 10% இற்கு மேல் கொள்வனவு செய்ய விரும்பினால்
02) உள்நாட்டில் கிளையை ஆரம்பித்தல், மூடுதல்
03) வெளிநாடுகளில் கிளையை ஆரம்பித்தல், மூடுதல்
04) ஒரே நோக்குடைய வேறு வங்கியை அல்லது அதன் கிளையை கையேற்றல்
05) வெளிநாட்டு வங்கி ஒரு உள்நாட்டு வங்கியைக் கையேற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1988ஆம் ஆண்டு நிதிக்கம்பனிச்சட்டம் (நிதிக் கம்பனி)

1979ஆம் ஆண்டு நிதிக்கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாகவும், நிதிக் கம்பனியை கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய வங்கியின் நாணய சபைக்கு உயர்ந்தளவு அதிகாரங்களை வழங்குவதற்கும் ஆக இவை 1988ஆம் ஆண்டு நிதிக்கம்பனிச்சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி நிதிக்கம்பனிகளை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துவதற்கு என நிதிக்கம்பனிகள் திணைக்களமும் உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. இச்சட்டத்தின்படி பின்வரும் தொழிற்பாடுகளை மாத்திரம் நிதிக்கம்பனிகள் ஆற்றலாம்.

01) வைப்புக்களை ஏற்றல்
02) கடன் வழங்கல்
03) வாடகைக் கொள்வனவுக்கு நிதிவழங்கல்
04) வாகனம் இயந்திரங்களை குத்தகைக்கு விடுதல்
05) பங்குகளை ஒப்புறுதியில் விற்றல்
06) முதலீட்டு ஆலோசனை வழங்கல்

1988ஆம் ஆண்டு புதிய நிதிக்கம்பனிகள் சட்டம் பின்வரும் பண்புகளை உடைய நிதிக்கம்பனிகள் மாத்திரம் நிதி நடவடிக்கையில் ஈடுபடலாம் என வலியுறுத்துகின்றது.

01) மத்திய வங்கியின் நாணய சபையின் அங்கீகாரம் பெற்று உருவாக்கப்பட வேண்டும்
02) கம்பனியாக 1982ஆம் ஆண்டு 17 இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து வருவிக்கப்பட வேண்டும்.
03) ஆகக்குறைந்தது 5 மில்லியன் ரூபா வழங்கிய மூலதனத்தைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

### மத்திய வங்கி நிதிக்கம்பனிகளை கட்டுப்படுத்துவதன் பிரதான நோக்கம்

01) வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல்
02) நாட்டின் நிதி நிர்வாகத்தை ஸ்திரப்படுத்தல்
03) நியாயமான முறையில் செயற்படும் நிதிக்கம்பனிகளின் நலன்களைப் பாதுகாத்தல்.
04) தேசிய பொருளாதார அபிவிருத்தியில் நிதிக்கம்பனிகளின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988ஆம் ஆண்டு புதிய நிதிக்கம்பனிச்சட்டத்தின்படி நிதிக்கம்பனிகளைக் கட்டுப்படுத்துவதுடன், அவற்றின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் மத்திய வங்கியின் நாணய சபை பின்வரும் அதிகாரங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

01) வைப்புகளுக்கு வழங்கக்கூடிய உச்ச வட்டி வீதத்தைத் தீர்மானித்தல்
02) வைப்புகளுக்கான கால அளவைத் தீர்மானித்தல்
03) கடன் வழங்க வேண்டிய நிபந்தனைகளைத் தீர்மானித்தல்
04) கடனுக்காக அறவிடும் உச்ச வட்டி வீதத்தை தீர்மானித்தல்
05) வைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான தொடர்பினை வரையறுத்தல்
06) கம்பனியின் நிதிக் கூற்றுக்களை மாதாமாதம் மத்திய வங்கி பார்வையிடும் அதிகாரத்தைக் கொண்டிருத்தல்.
07) வைப்பில் 6% அரச பிணைகளில் முதலீடு செய்ய வேண்டும்
08) வைப்பில் 15% திரவச் சொத்தாக பேணிவருதல் வேண்டும்
09) வருடா வருடம் கணக்காய்வு அறிக்கை அனுப்ப வேண்டும்
10) வியாபார இடத்தை இடமாற்ற அனுமதி பெற வேண்டும்.

இறுதியில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் அளவில் நிதிக்கம்பனிகளின் ஊழல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும், வாடிக்கையாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்காகவும் பின்வரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

01) நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையில் மத்திய வங்கியின் ஒருவர் இயக்குனராவதற்கு வசதி வழங்கியமை.
02) மோசடிகளில் ஈடுபடும் நிதிக்கம்பனிகளின் நிர்வாக இயக்குனர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யும் திட்டம்.
03) மோசடி புரியும் நிதிக்கம்பனிகளின் முகாமையை மத்திய வங்கியின் நாணய சபை ஏற்றல்.
04) மோசடிகளில் ஈடுபடும் நிதிக்கம்பனி மீது நீதிமன்ற வழக்கு தொடரல்

## முகவர் வங்கித் தொழில்
## *(Agency Bank)*

1988ஆம் ஆண்டு வணிக வங்கிகளின் சார்பில் பொதுமக்களுக்கு நீண்ட கால நடுத்தர கடன்களை வழங்குவதற்காக இம்முகவர்கள் நியமிக்கப்பட்டனர். முகவர்களுக்கு வங்கி 18% வட்டிக்கு கடன் வழங்கும் போது அதனை முகவர் பொதுமக்களுக்கு ஆகக்கூடியது 30% வட்டிக்கு கடன் வழங்கலாம், நியமிக்கப்பட்ட முகவர் ஒருவருக்கு 10,000 ரூபா வரை வங்கி கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும். முகவரால் தனி ஒருவருக்கு வழங்கக்கூடிய கடனின் அளவு 5,000 ரூபா ஆகும். இக்கடனின் முதிர்வுக்காலம் 7 வருடங்கள் ஆகும். முகவரை நியமிக்கும் அதிகாரம் வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு உண்டு.

### இத்தகைய முகவர் வங்கித் தொழிலினால் கிடைக்கும் அனுகூலங்கள்:

01) சுலபமாகக்கடன் பெறும் வசதி அளித்தல்.
02) வங்கியின் நிர்வாகச் செலவைக் குறைத்தல்.
03) வங்கிக்கு முதலீட்டு வாய்ப்பை அளித்தல்.
04) முறைசாராத கடன் வழங்குனருடன் போட்டியிட முடிதல்.
05) கிராமிய கடன் பெறுனர் குறைந்த வட்டியில் கடன் பெற முடிதல்.
06) குறைந்தளவு ஆவணங்கள் போதுமானது.

## ஊழியர் சேமலாப நிதியத்தின் (*E.P.F.*) கடன் திட்டம்

1988ஆம் ஆண்டு ஊழியர்களின் நலன் கருதி இக்கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி ஓர் ஊழியரின் சார்பில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் காணப்படும் மொத்த உதவு தொகையில் 75% கடனாகப் பெறலாம். இவ் உதவு தொகையினை உறுதிப்படுத்தி மத்திய வங்கியினால் உத்தரவாதச் சான்றிதழ் வழங்கப்படும். அதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், அரச ஈட்டு முதலீட்டு வங்கி ஆகிய நிதி நிறுவனங்களிடம் கடன் பெறலாம். இக்கடன் வீடுகட்டுவது, வீடு கொள்வனவு செய்தல் போன்ற நோக்கங்களுக்கு வழங்கப்படும். இக் கடனினால் தொழிலாளருக்கு கிடைக்கும் இரண்டு அனுகூலங்களாவன.

01) சொத்துக்கள் பிணையாக வைக்க வேண்டி ஏற்படாது
02) குறைந்த வட்டிக்கு நீண்டகாலக் கடன் பெறமுடிதல்

## பாடசாலை மாணவர்களுக்கான விபத்து காப்புறுதி

பாடசாலை மாணவர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்காப்புறுதி மாணவன் பாடசாலை செல்லும்போது அல்லது பாடசாலையிலிருந்து திரும்பும் போது அல்லது பாடசாலை நேரத்தில் விபத்து காரணமாக ஏதாவது நட்டம் ஏற்படின் நட்ட ஈடு வழங்கப்படும். இக்காப்புறுதியின் பண்புகள்.

01) பாடசாலையின் ஆகக்குறைந்தது 100 மாணவன் அல்லது 40% மாணவர் இத்திட்டத்தில் இணைய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) நட்டம் ஏற்படும் வேளையில் ஆகக் கூடியது 10,000 ரூபா வரை நட்டஈடு வழங்கப்படும்

03) மாணவர் காப்புறுதிச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும்

04) மாணவரின் பூரண இயலாமைக்கு 100%உம், பகுதியளவிலான இயலாமைக்கு 50%உம் நட்டஈடு வழங்கப்படுகின்றது.

05) நோய் காரணமாக சிகிச்சை பெறப்பட்டு இருப்பின் 50-1300 ரூபா வரையளவு கொடுப்பனவு வழங்கப்படும்.

## கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் தங்க விற்பனை

இலங்கை மத்திய வங்கி தங்க வியாபாரத்தை ஊக்கப்படுத்தும் நோக்குடன் புதிய தங்க விற்பனை கடைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் வரி விலக்குகளும் அளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இக்கடை ஆரம்பிக் கப்பட்டதன் நோக்கமெல்லாம் அன்னியச் செலவாணியினை உழைத்துக் கொள்வதுடன், தங்க வியாபாரம் தொடர்பாக இடம் பெறும் மோசடிகள் ஊழல்களைக் கட்டுப்படுத்துவதுமே ஆகும். மூன்று தங்க வியாபாரக் கடை கள் காணப்படுகின்றன.

01) விமான நிலையத்தின் வெளியேறும் மாறிச் செல்லும் கட்டிடத்தில்

02) விமான நிலையத்தின் வருகைகள் கட்டிடத்தில்

03) மத்திய வங்கியின் தலைமையலுவலகக் கட்டிடத்தின் கீழ் மாடி

1990 ஜூனில் முதலாவது தங்க வியாபாரக் கடை வெளியேறும், மாறிச் செல்லும் பயணிகளின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டதாகும். இக்கடையில் தங்கத்தை கொள்வனவு செய்பவர்கள் மீண்டும் அவற்றை இலங்கைக்கு கொண்டுவர முடியாது. இரண்டாவது தங்கக் கடை 1990 ஒக்டோபரில் விமானநிலையத்தின் வருகைகள் கட்டிடத்தில் திறக்கப்பட்டதாகும். இலங்கைக் கடவுச்சீட்டினை வைத்து இருப்பவர் இக்கடையில் தங்கத்தை பிரத்தியேகமாகக் கொள்வனவு செய்வதற்கான உரிமை உடையவர். 1000 அமெரிக்கா டொலர் ஆண்டொன்றுக்கு நபர் ஒருவருக்கு தீர்வையற்ற சலுகை ஆகும். மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்களில் மாத்திரம் தங்கத்தைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும்.

1991 ஆம் ஆண்டு மூன்றாவது தங்க கடை மத்திய வங்கியின் தலை மை அலுவலகத்தில் திறக்கப்பட்டது. இதில் இலங்கை நாணயத்திலும் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் தங்க விற்பனை செய்யப் பட்டு வருகின்றது. இதில் தீர்வை சலுகையுடன் எவ்வளவு தங்கத்தையும் கொள்வனவு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் அடிப்படையில் நகைகளை ஏற்றுமதி செய்யும் தங்க இறக்குமதியாளர்கட்கு அண்மையில் பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

01) ஏற்றுமதி செய்யப்பட்ட தங்க ஆபரணங்களின் நிறையில் 120% நிறையுள்ள தங்கத்தை அடுத்துவரும் 12 மாதகாலத்தினுள் இறக்குமதி செய்ய முடியும்.

02) உறுதிப்படுத்தப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு தங்கம் சலுகையுடன் இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## கடன் அட்டை அல்லது கொடுகடன் அட்டை
## *(Credit Card)*

வங்கிகள் அல்லது நிதிக்கம்பனிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் அல்லது சேவைகள் கொள்வனவு செய்வதற்கு வசதியாக பணத்திற்குப் பதிலாக இக்கடன் அட்டைகளை வழங்குகின்றது. கொடுக்கல் வாங்கல்களின் போது நேரடியாக பணத்தைப் பயன்படுத்தாது இக்கடன் அட்டையினைப் பயன்படுத்தி வரையறுத்த தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளிடம் இருந்து தேவையான பொருட்களை கொள்வனவு செய்யலாம். சில வேளைகளில் வங்கி அல்லது வங்கிக் கிளையில் கொடுத்து ஓரளவு பணமும் பெறமுடியும். காசு பயன்படாத வங்கித் தொழிலை ஊக்கப்படுத்துவதற்காகவே இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

வாடிக்கையாளருக்கு கடன் அட்டை வழங்கும்போது வங்கியினால் கருத்தில் கொள்ளப்படும் காரணிகள் வருமாறு:

01) வாடிக்கையாளரின் நிதி நிலைமை
02) நம்பத்தகு தன்மை
03) கடன் அட்டை வழங்கும் நிறுவனங்களின் விருப்பம்/ அவசியம்
04) வாடிக்கையாளரின் வருமானம், தொழில்

இக்கடன் அட்டையினைப் பயன்படுத்தும் போது பெற்றுக் கொள்ளும் அனுகூலங்கள் வருமாறு.

***அ) வாடிக்கையானர்***

01) பொருட்கள், சேவைகளை கடனுக்கு கொள்வனவு செய்தல்.
02) வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படல்.
03) பாதுகாப்பானது.
04) தன்னியக்க ரெலர் இயந்திரத்தில் விரும்பிய நேரம் பணம் பெறல்.
05) கணக்கு விபரங்களை வங்கி பேணும்.
06) கடனுக்கு குறிப்பிட்ட காலம் வரை வட்டி இல்லை.
07) காசோலைகளை அத்தாட்சிப்படுத்தும் அதிகாரம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆ) வியாபாரிக்கு**

01) வியாபாரப் புரள்வு அதிகரித்தல்.
02) கடன் விற்பனையின் போது ஏற்படக்கூடிய பண இழப்பு அபாயத்தை தவிர்த்தல்.
03) வங்கி மூலம் இலவச விளம்பரம் பெறலாம்.
04) கணக்கு வைக்கும் நடவடிக்கை இலகுபடுத்தப்படும்.

## சீபேங் அட்டை (*Cey Bank Card*)

காசு பயன்படாத வங்கித் தொழிலை ஊக்கப்படுத்துவதற்காக இலங்கை வங்கியும், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சர்வதேச விசா நிறுவனம் இணைந்து அறிமுகப்படுத்திய ஒருவகை கடன் அட்டையே இதுவாகும். இவ் வட்டையில் அட்டை இலக்கம், செல்லுபடி ஆகும் காலம், பின்புறத்தில் காந்தமை எண்கள், கையொப்பம் போன்ற விபரங்கள் குறிக்கப்பட்டு இருக்கும். இலங்கை வங்கியில் இருந்து இவ் அட்டையினை பயன்படுத்து வதற்கு வங்கியில் வாடிக்கையாளராக இருக்கவேண்டியது இல்லை. அட்டையினை பெறுபவரின் தொழில், வருமானம், நம்பிக்கை போன்ற வற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

சீபேங் கடன் அட்டையினைப் பயன்படுத்தும். வாடிக்கையாளர்களை உள்ளடக்கி சூப்பர் கிளப் (Super Club) அமைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய அட்டையினை பயன்படுத்தி உணவு விடுதி, பிரபல ஹோட்டல்கள், வைத்திய நிலையங்கள், பயணமுகவர் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள் போன்றவற்றிடம் பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்யலாம். (இலங்கை வங்கி பின்வரும் 5 வகை கடன் அட்டைகளைக் கொண்டு காணப்படுகின்றது.)

01) உள்நாட்டு தங்க அட்டை
02) உள்நாட்டு முதல் தர அட்டை
03) சர்வதேச முதல் தர அட்டை
04) சர்வதேச தங்க அட்டை
05) வியாபார அட்டை

1992ஆம் ஆண்டு இலங்கை வங்கியினால் சர்வதேச கடன் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இது சர்வதேச விசா அட்டை என அழைக் கப்படும். இதனை பயன்படுத்தி வெளிநாடுகளில் பொருட்கள், சேவைகளை அங்கீகரிக்கப்பட்டவர்களிடம் இருந்து கொள்வனவு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாஸ்டர் அட்டை *(Master Card)*

ஐக்கிய அமெரிக்கா நாடுகளில் உலகப்பிரசித்தி பெற்ற சிறப்பு அட்டை நிறுவனத்துடன் கூட்டுச்சேர்ந்து இலங்கையிலுள்ள சம்பத் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச கடன் அட்டையே இதுவாகும். இவ் அட்டையை பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளிடம் இருந்து தேவையான பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யலாம். அத்து டன் சம்பத் வங்கியின் ரெலர் பொறி வசதிகளும் வழங்கப்படுகின்றது.

இவ் அட்டையினை அடிப்படையாகக் கொண்டு பொருட்களைக் கொள்வனவு செய்த பின்னர் கொள்வனவு கூற்று, வாடிக்கையாளருக்கு அனுப்பிவைக்கப்படும். அனுப்பப்பட்ட திகதியில் இருந்து 15 நாட்களுக்குள் பணம் செலுத்துவாரே ஆயின் வட்டி இல்லை. 15 நாட்களுக்கு பின்னர் செலுத் தப்படுவாரே ஆயின் வட்டி உண்டு.

## சர்வதேச கடன் அட்டை *(International Credit Card)*

வங்கிகள், தமது வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள், சேவைகளை வெளிநாடுகளில் கடனுக்கு கொள்வனவு செய்வதற்கு வசதி அளிக்கும் நோக் குடன் அறிமுகப்படுத்திய கடன் அட்டையே இதுவாகும். இலங்கை வங்கியின் சர்வதேச முதல் தர அட்டைகள் சர்வதேச தங்க அட்டை போன்வற் றை குறிப்பிடலாம்.

சர்வதேசக் கடன் அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு நாணய மாற் றுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் அண்மையில் பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

01) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளிடமிருந்து செலவாணியைப் பெற்றுக் கொள்ளலாம்.

02) குறிப்பிட்ட எல்லை வரை பொருள் கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டுச் செலவாணி கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி தேவை இல்லை

03) சில சந்தர்ப்பங்களில் வரையறுக்கப்பட்ட எல்லைக்கு மேல் வியாபாரக் கொடுக்கல் வாங்கலை செய்ய அனுமதி

## தொலைத் தொடர்புக் கூட்டுத்தாபனம் *(Tele Com)*

இலங்கையில் தொலைத் தொடர்பு சேவைக்குப் பொறுப்பாக தொலைத் தொடர்பு திணைக்களம் 1980 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதாகும். பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 ஆம் ஆண்டு தொலைத்தொடர்புத் திணைக்களம் சிறிலங்கா ரெலிக்கொம் என்ற பெயருடன் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டது. இவ் அமைப்பின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு:

01) தொலைபேசி இணைப்புக்கான அனுமதி வழங்கலும், தொலைபேசியை செயற்படுத்தலும்.
02) வானொலிப் பெட்டிகளுக்கு சான்றிதழ் வழங்கல்
03) தொலைபேசிச் சேவையை வழங்கும் தனியாருக்கு அனுமதி வழங்கல்
04) முகவர் தபால் நிலையத்துக்கு அனுமதி வழங்கல்
05) கடல் கடந்த தொலைத் தொடர்பு சேவை நடத்துதல்
06) தொலைபேசி விபரக்கொத்தை வெளியிடல், மேற்பார்வை செய்தல்
07) பக்ஸ், ரெலக்ஸ் போன்றவற்றைப் பயன்படுத்த அனுமதித்தல்.

## தொலைத் தொடர்பில் அண்மையில் ஏற்பட்ட அபிவிருத்தி

01) தொலைத்தொடர்பு திணைக்களம் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டது
02) புதிய தொலைபேசி இணைப்புக்கள் அதிகரிக்கப்பட்டமை
03) நேரடி தொலைபேசி வசதி அதிகரிக்கப்பட்டமை
04) சர்வதேச நேரடி தொலைபேசி அதிகரிக்கப்பட்டமை
05) தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் கணனி மயப்படுத்தப்பட்டமை
06) தொலைபேசி விபரக்கொத்து வெளியிடும் உரிமை ஜீ.சி.ஈ விபரக்கொத்து லங்கா கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டமை
07) சர்வதேச இரா வேளை அழைப்புக்கு சலுகைக் கட்டணம் குறித்த நாடுகளுக்கு அனுமதிக்கப்பட்டமை (22.00 மணிக்கும் 6.00 மணிக்கும் இடைப்பட்ட நேரப்பகுதி.)
08) போன் காட் அறிமுகப்படுத்தியமை
09) நடமாடும் தொலைபேசி முறை அறிமுகப்படுத்தியமை

## சேகரிப்பு அழைப்பு (*Collect Call*)

தொலைபேசி தகவல் பெறுபவரிடம் அழைப்பு இணைக்கப்படும் போது அழைப்புக்குரிய கட்டணத்தை செலுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்வாரா எனக் கேட்டு அறிந்த பின்புதான் தொலைபேசி இணைப்பு இணைக்கப்படும். எனவே அழைப்பை பெறுபவர் தமது நாட்டில் கட்டணத்தைச் செலுத்த முடியும்.

## செலூலர் இடம்பெயர் தொலைத் தொடர்பாடல்
### (நகரும் தொலைபேசி) (*Cellular Phone*)

செலூலர் நிறுவனங்களினால் ஏற்படுத்தப்பட்ட விசேட வலைப்பின்னல் பிரதேசத்தில் வானொலி அலைகள் மூலம் தொடர்பாடலில் ஈடுபடும் தொலைபேசி தொடர்பாடலை செலூலர் தொடர்பாடல் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985ஆம் ஆண்டு ஆரம்பமாகிய இந்த நவீன தொலைத்தொடர் முறை தற்பொழுது இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் செல்டெல் என்ற நிறுவனத்தினாலும் அதன் பின்னர் 1993 ஆம் ஆண்டு லங்கா செலூலர் சேவை நிறுவனம் கோல்லிங்க் என்ற பெயரிலும் செலூலர் இடம் பெயர் தொலைத் தொடர்பாடல் வசதியினை இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது. அத்துடன் அரசாங்கத் துறை செலூலர் தொலைத் தொடர்பாடல் என்ற அடிப்படையில் இலங்கை ரெலிகொம் நிறுவனம் அவுஸ்ரேலியா கடல் கடந்த கோம் யூனிகேசன் நிறுவனத்துடன் சேர்ந்து ஓர் செலூலர் இடம் பெயர் தொலைத் தொடர்பாடல் சேவை அறிமுகப்படுத்தியுள்ளது. இந் நிறுவனங்கள் தமது சேவையினை கொழும்பு பெரும்பாக பகுதி, கண்டி, குருநாகல், காலி, நுவரெலியா போன்ற இடங்களில் விசேட வலைப்பின்னல் வசதிகளைக் கொண்டுள்ளது எதிர் காலத்தில் இத்தகைய வலைப்பின்னல் முறை விரிவுபடுத்தப்பட உள்ளது. தற்காலத்தில் பெரும் பகுதி வியாபாரிகளே இத்தகைய நகரும் தொலைபேசி வசதியினை பயன்படுத்துகின்றனர்.

செலூலர் இடம்பெயர் தொலைத் தொடர்பாடல் கருவியைப் பயன்படுத்தி நடமாடும் சேவையைப் பெறக்கூடியதாக இருக்கும். இதன்படி ஒரு இடம்பெயர் தொலைத் தொடர்பு கருவியில் இருந்து மற்றொரு இடம்பெயர் கருவியுடன் அல்லது நிரந்தரமாக பொருத்தப்பட்ட கருவியுடன் தொடர்பு கொள்ள முடியும். அத்துடன் உலகின் பல்வேறு நாடுகளுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும். வானொலி அலைகளின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்படுவதால் நடமாடும். சேவை அதிகளவில் சாத்தியப்படுகின்றது. அத்துடன் நவீன கைக்கடக்கமான சிறிய, விரைவில் எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய தொலைபேசியாகக் காணப்படுகின்றது.

*செலூலர் தொடர்பாடல் முறையினால் கிடைக்கும் அனுகூலம்*

01) போக்குவரத்தின் போது தொடர்பாடலில் ஈடுபடலாம்.
02) விரும்பிய இடத்தில் விரும்பிய நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.
03) சர்வதேச நேரடி சுழற்சித் தொடர்பாடலில் ஈடுபடல்
04) சிறிய கைக்கடக்கமானதாகும்
05) ஒரே நேரத்தில் பல இலக்கங்களை ஞாபகப்படுத்தலாம்
06) வேறு நபர் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தலாம்.
07) அழைப்புக்களின் செய்தியைப் பதிவு செய்யலாம்
08) சாதனத்தை உடனடியாகப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசிக் கொடுப்பனவு அட்டை
*(Pay Phone Card)*

அரசின் தொலைபேசி வழங்கலில் உள்ள தாமதம், பற்றாக்குறை ஆகிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அரசினால் தொலைபேசி கொடுப்பனவு அட்டை (Pay Phone Card) முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை இலங்கையில் (Lanka Pay Phone) லங்கா பே போன் நிறுவனம் லங்கா பே போன் அட்டையினையும், இலங்கை ரெலிக்கொம் நிறுவனம் தொலைபேசி அட்டையினையும் அறிமுகப்படுத்தியுள்ளது. ரெலிக்கொம் நிறுவனத்தின் இத்தகைய தொலைபேசி அட்டை முறை கொழும்பு தலைமை அலுவலகத்தி லேயே செயற்படுகின்றது.

அதைத் தொடர்ந்து Metro Card, Super Card என்ற பெயரிலும் தனியார் கம்பனிகளினால் இவ் அட்டை முறை செயற்படுத்தப்படுகின்றது இதனால் தொலைபேசி வழங்கலில் உள்ள தாமதத்தை தவிர்க்க முடியும்.

இலங்கையில் தற்போது பிரபல்யமான தொலைபேசிக் கொடுப்பனவு அட்டை முறையாக லங்கா பே போன் முறையேகாணப்படுகின்றது. இலங்கையில் மூலதன அபிவிருத்தி முதலீட்டுக்கம்பனியும், ஈக்விட்டி முதலீட்டு கம்பனியும் இணைந்து மலேசிய நாட்டைச் சேர்ந்த அன்டா ஓவர் சீறோல் டிளு கம்பனியுடன் இணைந்து இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைமுதலீட்டு சபையின் அங்கீகாரம் பெற்ற இத்திட்டம் கொழும்பிலும் கண்டியிலும் ஆரம்பிக்கப்பட்டது தற்பொது நாடு பரவலாக காணப்படுகின்றது. 1992ஆம் ஆண்டு 20 இடங்களில் பொருத்த தீர்மானிக்கப்பட்டது. இதற்காக நியமியக்கப்பட்ட முகவர்களிடம் இருந்து 50, 100, 300, 500, 800 ஆகிய விலைகளில் இக்கார்ட்டைப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொலைத் தொடர்பு முறை முற்றிலும் கம்பியூட்டர்களினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. கொள்வனவு செய்த கார்ட்டை பயன்படுத்தும் போது பயன்பாட்டுக்கு ஏற்ப கழிக்கப்படும்.

## தொலைபேசி அட்டை முறையினால் கிடைக்கும் அனுகூலம்

01) பயன்படுத்திய நேரத்துக்கு மாத்திரம் பணம் அறவிடப்படும்.
02) நாணயம் பயன்படுத்த வேண்டியது இல்லை. என்பதால் பாதுகாப்பானது.
03) குறைந்த செலவுடையது.
04) சர்வதேச நேரடி தொலைபேசி முறையும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) அனைவரும் பயன்படுத்தலாம்.

06) விரும்பிய நேரங்களில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

07) குறிப்பிட்ட சில இடங்களில் பரவலாக காணப்படல் தொடர்பாடும் போதே அட்டையில் மீதியாக உள்ள பணத்தொகையை அறிய முடிதல்.

## கரையிலிருந்து கப்பலுக்கான அழைப்பு

தொலைபேசி உடமையாளர் அதிகளவு - கட்டணம் செலுத்தி இச் சேவையை பெறலாம். 3 நிமிடங்களுக்கு 324/= ஆகும். ஒவ்வொரு நிமிடத் துக்கும் 108/= ஆகும்.

## பன்னற் தந்திகள் (*Phonogram*)

வழமையான தந்தியை அஞ்சல் அலுவலகத்துக்கு செல்லாது தொலை பேசி ஊடாக அஞ்சல் அலுவலகத்துக்கு அனுப்பி அவற்றின் ஊடாக பரிமாற் றல். காலத்தையும் சிரமத்தையும் குறைக்கக்கூடியதாக இருக்கும். கூலி 1.50 சதம் அறவிடப்படும்.

இத்தகைய தொலைபேசி தந்தி முறையின் மூலம் பின்வரும் அனுகூலம் கிடைக்கும்.

01) தொலைபேசி மூலம் தபால் அலுவலகத்துக்கு தந்தி செய்தியை அனுப்பமுடிதல்.

02) வெளியிலிருந்து வரும் தந்தி செய்தியை தபால் அலுவலகத்தில் இருந்து நேரடியாக தொலைபேசி மூலம் பெறலாம்.

## பதிலுக்குப் பணம் கட்டும் தந்தி

தந்திக்கான பதிலை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கான தந்தியுடன் பதிலுக்கு முன்கூட்டியே பணம் செலுத்தப்படவேண்டும். இவ்வாறு பணம் செலுத்தினால் அனுப்பப்படும் தகவலுக்கு தேவையான பதிலையும் சிலமணி நேரத்தில் பெற முடியும்.

## தந்தி விலாசம் (*Telegram Address*)

வழமையான முகவரியின் குறியீட்டு வடிவமாக மாற்றிக்கொள்வ தனை இது கருதும் காலதாமதம், செலவு போன்றவற்றை குறைத்துக் கொள்வ தற்காகவே தந்தி விலாச முறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதாகும். வருட கட்டணம் 500/= அரையாண்டுக் கட்டணம் 300/= ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைதூதர் சேவை (*Couier Service*)

கடிதங்கள், ஆவணங்கள், பொதிகள் போன்றவற்றை சர்வதேச ரீதியாக விமானம் மூலமாக விரைவாக பரிமாறுவதற்காக பயன்படுத்தப்படும் தூதர் சேவையை கருதும் இச் சேவையை நிரந்தரமாக பெற விரும்புவர் இந் நிறுவனங்களின் சந்தா தாரராக சேர்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org